# “சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டால் . . . !

# விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படலாம்!”


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, ஆடி 15உ (30-7-72) ஞாயிறு 1391 ஜமாஅகிர் 18 புத்தகம் 25 இதழ் 36


## கல்வியமைச்சருக்கு தமிழர் கூட்டணி எச்சரிக்கை!

தமிழ் மக்களின் விருப்பத்துக்கு விரோதமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு சிங்களம் போதிக்கும் ஆசிரியர்களை அனுப்பி சிங்களத்தை திணிக்கும் கல்வியமைச்சின் நடவடிக்கைகளை தமிழர் கூட்டணி கடுமையாக எதிர்க்கவிருக்கிறது.

சிங்களத் திணிப்பை முறியடித்திட தமிழர் கூட்டணி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, அதன் அடுத்த நடவடிக்கை குழுக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

“தமிழ்பகுதிகளிலுள்ள தமிழர் பாடசாலைகளுக்கு சிங்களம் போதிக்கும் ஆசிரியர்கள் அனுப்படுவதை தமிழ் மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். தமிழ் ஈழத்திலுள்ள பெரும்பான்மையான பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் சிங்களம் போதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இந்நிலையில் கல்வியமைச்சு எதேச்சாதிகாரமான முறையில், தமிழ் மக்களின் விருப்பத்துக்கு முரணாக சிங்களம் போதிக்கும் ஆசிரியர்களை அனுப்பி தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தை திணிக்க முயற்சிப்பது விரும்பத் தகாத விளைவுகளையும், அரசின் மீது வெறுப்பையும் ஏற்படுத்தலாம். இதனால் தேசிய ஒற்றுமைகூட பாதிக்கப்படலாம். எனவே சிங்கள ஆசிரியர் அனுப்பும் திட்டத்தை கல்வியமைச்சு உடனடியாகக் கைவிடவேண்டும்.”

—இவ்வாறு தமிழர் கூட்டணி பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

22.7.72 வீரகேசரி செய்தியின்படி இந்த மாதம் 500 சிங்கள ஆசிரியர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்ப கல்வியமைச்சு முடிவு செய்துள்ளதாம்.

## சிங்கள மக்களின் மனச்சாட்சிக்கு

# அறைகூவல்!

## ஆறு அம்சக் கோரிக்கையை ஏற்று தேச ஒற்றுமையை நிலை நாட்டுக!

### கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் தமிழர் கூட்டணித் தலைவர்கள் முழக்கம்!

“இலங்கை, தமிழ்நாடு, சிங்கள நாடு என இரண்டு தனித்தனி நாடுகளாக பிளவுபடாமல் ஒரே நாடாக இருக்கவேண்டுமென்றால் தமிழினத்தின் சார்பில் தமிழர் கூட்டணி சமர்ப்பித்துள்ள ஆறு அம்சக் கோரிக்கைகளை ஏற்று அதை அரசியலமைப்பிலும் இடம்பெறச் செய்யுங்கள். நாடு பிளவுபடக் கூடாது என்று எமக்கிருக்கும் ஆவலினால்தான் இந்த ஆறு அம்சக்கோரிக்கையை முன் வைத்துள்ளோம். தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கையை அரசும் சிங்கள மக்களும் செப்டம்பர் 30ம் திகதிக்கு முன் ஏற்றுக்கொள்ளத் தவறினால், தமிழ் மக்கள் நிச்சயம் போராட்டத்தில் குதிப்பார்கள் — அதன் பயனாக நாட்டின் ஒற்றுமை பாதிக்கப்படும் —”

— இவ்வாறு அரசுக்கும் சிங்கள மக்களினது மனச்சாட்சிக்கும் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் பிரமாண்டமான பிரசாரக் கூட்டத்தில் பேசிய தமிழர் கூட்டணித் தலைவர்கள் அறைகூவல் விடுத்தனர்.

22-7-72ல் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு, அண்மைக்காலத்தில் கொழும்பு மாநகரமே கண்டிராத

(7-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசு தொழிற்சங்க தலைவர் கைது!

இலங்கை தமிழரசுக் கட்சியின் தொண்டரும் ‘மணியம்’ என்று அன்புடன் அழைக்கப்படுபவருமான திரு. வி. சுப்பிரமணியம் யாழ் பொலீசாரால் சென்ற செவ்வாய்க்கிழமை (25.7.72) கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின் தலைவராக இவர் விளங்குகிறார்.

## நடைமுறைத் தமிழியக்கத் தலைவரின் தமிழ் கடிதத்துக்குச் சிங்களத்தில் பதில்!

### நாடாளுவோரின் கபட நாடகம் அம்பலம்!

அமைச்சர்களும், அரசின் அடிவருடிகளும், அரசுக்கு ஆலவட்டம் வீசும் நாளேடுகளும் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு அரசாங்கம் தமிழில் பதில் வழங்குவதாகவும், தமிழர்கள்தாம் தமிழில் எழுத முன்வருகிறார்களில்லையென்றும் தொடர்ந்து திட்டமிட்ட பொய்ப் பிரசாரத்திலீடுபட்டு வருவது தமிழ் மக்கள் அறிந்ததே. ஆனால் நடைமுறையில் தமிழர்கள் தமிழில் எழுதும் கடிதங்களுக்கு அரசாங்கத் திணைக்களங்களும் அமைச்சுக்களும் சிங்களத்திலேயே இன்றும் மறுமொழி அனுப்பிவைக்கின்றன.

அரசாங்கத்தின் சிங்களத் திணிப்புக்கு அண்மையில் பலியாகியிருக்கிறார் நடைமுறைத் தமிழியக்கத் தலைவர் திரு. க. இளையதம்பி. இவர் தமது பிள்ளைகளின் பிறப்புச்சான்றிதழை தனித் தமிழில் தருமாறு கோரி அரசுடன் சென்ற பலமாதங்களாக போராட்டம் நடத்தி வருகிறார்.

இது சம்பந்தமாக 29-3-72ல் பதிவாளர் நாயகத்துடன் தமிழில் கடிதத்

(4-ம் பக்கம் பார்க்க)

## காசி ஆனந்தன் உதவி நிதி!

சிறையிலிருக்கும் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் தமிழ் விடுதலை உணர்வையும், தியாக உணர்வையும் கௌரவிக்கு முகமாகவும், தமிழினத்தின் நன்றியை காட்டும் பொருட்டும், கவிஞர் சிறையிலிருந்து வெளிவந்ததும், அவருக்கு ஓர் பொற்கிழி வழங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

காசி ஆனந்தன் அன்பளிப்பு நிதிச் சபை ஒன்று 25-5-72ல் கொழும்பில் உருவாக்கப்பட்டு நிதி சேர்க்கும் முயற்சி சிராக நடைபெற்று வருகின்றது. வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு போன்ற சகல பகுதிகளிலுமுள்ள உணர்ச்சிமிக்க தமிழர்கள் இந்த நிதிக்கு ஆர்வமுடன் உதவி வருகிறார்கள்.

இந்நிதிக்கு உதவ விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

திரு. சா. செ. சந்திரகாசன்
20, பேதிரிஸ் வீதி,
கொழும்பு-3

**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் இன்று 51வது நாள்!**

## வெடிக்கிறார் தோழர் வி. பொன்னம்பலம்!

‘தினகரன்’ ஏட்டின் ‘இவ்வார நட்சத்திரங்களில்’’ ஒருவராகிய திரு. வி. பொன்னம்பலம் மாஸ்டரிடம் ஒரு கேள்வி.

தமிழர் கூட்டு முன்னணியை விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளீர்கள். (தினகரன் 10.7.72; 22.7.72) நல்லது. தங்கள் வெற்று வேட்டுக்களை வெடிக்குமுன் சற்றே உள் வீட்டுக்குள் நோட்டம்விட வேண்டாமோ? உலகளாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் எந்த நாட்டிலும் நடைபெற்றிராத அவமானத்தை மூஞ்சையெங்கும் அள்ளி அப்பிக்கொண்டு மூளியாகி நிற்கிறது உங்கள் கம்யூனிஸ்ட் கட்சி.

கட்சித் தலைவர் டொக்டர் விக்கிரமசிங்கா உட்பட நான்கு கம்யூனிச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ‘முற்போக்கு’ அரசாங்க நாடாளுமன்ற குழுவிலிருந்து ‘புரட்சிகரமாக’ உதைத்துத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நாற்றமெடுக்கும் இந்த சங்கதிகளைக் கேட்டு நாகரிகமான முற்போக்குவாதிகள் மூக்கைப் பொத்திக்கொள்கிறார்கள். சோரம் போய்க்கிடக்கிறது சொந்த வீட்டிலே அதைக் கொஞ்சம் கவனியுங்கள்! இந்த லட்சணத்தில், வீரமென்ன வேண்டிக்கிறது மாஸ்டர், வீரம்?

—கரிகாலன்

## சோஷலிசமாம் சோஷலிசம்..!

அண்மையில் நூல்நிதியோகக் கூட்டுத்தாபனம் கணக்காய்வு லிகிதர் (தரம் 2) (Post of Internal Audir Clerk Grade 2) பதவிகளுக்குபத்திரிகைகள் மூலம் விண்ணப்பங்கள் கோரியிருந்தது. இதற்கு விண்ணப்பிப்பதற்காக கொழும்பு யோர்க் வீதியிலுள்ள அதன் அலுவலகத்துக்கு தமிழ் இளைஞர்கள் விண்ணப்பப்படிவம் கோரிச் சென்றபோது, தனிச் சிங்களப் படிவங்களே கொடுக்கப்பட்டன. தமிழ், ஆங்கில படிவங்கள் இல்லையாம் என கைவிரிக்கப்பட்டதாம்.

சிங்கள சோசலிசம், தமிழ் இளைஞர்களின் கழுத்தை எவ்வெவ்வகையில் எல்லாம் நெரிக்கிறது என்பதற்கு இது மற்றோர் சிறு உதாரணம்!

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறையா உனக்கு கவிவேந்தே!

உணர்ச்சிக் கவிஞா உயிர்நண்பா
உனக்குச் சிறையா? உடனறிய
கணிச்சி கொண்டு உடல்பிளந்த
கடுப்பாய்ச் செய்தி விழிநீரில்
அணத்த வுலையின் பெருந்தீயாய்
அகத்துள் துயரம் துடித்துவுடல்
திணர்த்த வுந்தன் ஈடில்லாத்
தியாகம் எண்ணித்தெளிந்தேனே

தந்தை செல்வா தலைமையிலே
தமிழர் ஈழம் தனைக்காக்க
முந்திக் குதித்து மட்டுநகர்
முழுதும் இளைஞர் அணிதிரட்டி
சிந்தா வுறுதிப் படைசேர்ந்து
செய்த வறப்போர் அத்தனையும்
இந்த நாட்டின் எதிர்காலம்
ஈழப் பரணி எனப்பாடும்

ஊனை உயிரை உளமதனை
உறவை வாழ்வை உணர்வதனைத்
தீனை நிறைவை உடமைகளைத்
திரளும் சுகத்தைத் திறமைகளைத்
தேனை மேவும் சுவைத்தமிழாய்த்
தெரிந்து மாற்றிச் செயலாக்கும்
தானைத் தலைவா தமிழ்த்தலைவா
தமிழ்த்தாய் பெற்ருள் பேறல்லவா!

—பொன் தவம்

ஃ ஃ

வேலென்ருல், வில்லென்ருல், விளையாட்டுக்
கருவியென்ற வீர மக்கள்
பாலென்ருல், தேனென்ருல், பைந்தமிழின்
இனிமை பெற்ற தமிழர் நாங்கள்
சிறையிருந்து, செக்கிழுத்து, செந்தமிழின்
மேன்மைதனை காத்த மக்கள்
அறையை விட்டுப் புறப்படுவோம் ஆனந்தன்
கவிதைகளை நாடெங்கும் முழக்கிடுவோம்!

—சுகி. திருவருள்

ஃ ஃ

வெலிக்கடை வெஞ்சிறையில்
வேந்தே நினக்கென்ன இடம்!
புலிக்குகை புகுந்திடற்குப்
போதிய வீரமுளோய்!
எச்சிலையுரிமையதை இத்
தமிழினம் ஏற்பதாமோ—என
கர்ச்சித்த சிங்கம தின்
கர்ச்சனையேன் அடங்கியதோ!
செந்தமிழன்னையவள்
செம்மலே நின் நினைவால்
வெந்தழலில் மெழுகது போல்
வேகுகின்ருன் இன்றுலகில்!
இனவெறியாட்சியாளர்
ஏறு நினக்கெதிர்ப்பானுல் — நம்
எழிற்றமிழ்த் தெய்வமவள்
என்று முந்தன் பக்கமாவாள்

—க. க. பீதாம்பரம்

ஃ ஃ

பாலினைப் பருகிடப் பசியது வருத்திடப்
பாய்ந்ததே பசுக்கன்று—கழுத்து
நூலினைப் பற்றியே வாலினைச் சுற்றியே
கட்டையில் மாட்டினுரின்று!
தாயினைப் பழித்தவன் தலைவிதி மாற்றியே
தமிழினை வாழ்விப்பே னென்று!—கூர்
வாளினைமிஞ்சிடும் வார்த்தையைக்கொட்டினன்
வதைபடுகின்ருனே வெந்து!

பாவினைப் பாடியே சுதந்திரப் பயிரினைப்
பாரதி வளர்த்தது தவருே! —விடுதலைத்
தீயினை மூட்டிட விக்டர் கியூகோ
விளம்பிய முறையென்ன குறையோ!
படையினை ஏவியே பைந்தமிழ்க் கவிஞனை
சிறையினில் அடைத்திடல் நலனே! —தூய
பௌர்ணமி நிலவினில் பகவான் புத்தரும்
பாரினுக் கருளிய பண்பே!

—அல்லைப்பிட்டி செ. திருநாவுக்கரசு.

ஃ ஃ

தெய்வம் நீ அப்பா உன் இனத்தில்
பொய்யர் கூட்டமும் பிறந்திட்டுதே—தெய்வமே
மெய்யாக நான் சொல்கிறேன் அண்ணு காசி
உய்வுண்டு தமிழர்க்கு உன் போன்ருராலே

காராக் கிருகத்தில் நீ அடைபட்டிருந்திடினும் அண்ணு காசி
வேழ நிகர் தம்பிமாருண்டு நின் பணியினைத் தொடர
சழக்கர்களுக்குச் சாட்டை யடி நீ தானய்யா
ஈழத் தமிழர்க்கு எடுத்துக் காட்டு நீ ஐயா

—மூதூர் அ...



செ. தயாளநேசன்,
பண்டத்தரிப்பு.

கே: குடியரசாக்கியது தமிழ்மக்களுக்கு நன்மையா தீமையா?

ப: குடியரசு சிங்களவருக்கு — கொடிய அரசு தமிழருக்கு!

ஃ

எஸ். எம். சிவனடியான்
சின்ன வேர்க்கொல்லை தோட்டம்,
டிக்கோயா.

கே: துன்பம் ஏன் மனிதனை தொடர்கிறது?

ப: இன்பத்தின் சுவையை கூட்டுவதற்கு!

ஃ

செ. முரளிதரன்
தையிட்டி,
காங்கேசன்துறை.

கே: ''தினபதியாரின்'' திக்கற்ற செய்திகள் திக்குமுக்காடுகின்றனவாம். அது பற்றித் தங்கள் அபிப்பிராயம்?

ப: பொய்யும் கயமையும் எத்தனை நாளைக்கு விலை போகும்?

ஃ

நா. விஞயகமூர்த்தி,
சினைக்குடியிருப்பு,
கல்முனை.

கே: அரசியலமைப்புச் சபைக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியினரும் கலந்து கொண்டிருந்தால் புதிய அரசியல் திட்டத்தை நல்ல முறையில் தயாரிப்பதற்கு உதவியாக இருக்குமென அவுட்டோஸ் அருளம்பலம் கூறுவதின் மர்மமென்ன?

ப: அப்படி நடந்திருந்தால் தமிழினத்தின் அடிமைச் சாசனத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைத்த பழி தம்மை மட்டும் சூழாது தமிழரசுக்கட்சியையும் சூழ்ந்திருக்குமே என்கிற நப்பாசைதான்!

ஃ

கே. ஜே. பிரேமலோசன்
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

கே: தென்னகத்து 'இந்து நேசன்' பத்திரிகைக்கும் தினசுதிக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இரண்டும் நடத்துவது வேசித்தனம்தான்!

ஃ

மா. வைகுந்தவாசன்
கோப்பாய் தெற்கு.

கே: ஐந்தாண்டுகளின் பின் இலங்கை வாழ் தமிழ் மக்களின் நிலை பற்றி உமது கருத்து என்ன?

ப: சுதந்திர மக்களாக வாழும் நிலைதோன்றிவிடும் என்று நினைக்கிறேன்!

ஃ

ஏ. தருமபாலசிங்கம்,
ஓமந்தை.

கே: துண்டுப்பிரசுரம் ஒன்றை விநியோகித்தார்கள் என்பதற்காக மூன்று தமிழ் மாணவர்கள் — உயர் கல்வி கற்றுக்கொண்டிருக்க வேண்டிய மாணவர்கள் — இன்று சிறைக்குள் தள்ளப் பட்டிருக்கிருர்கள். ஆனுல் அதே துண்டுப்பிரசுரத்தை விநியோகித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை ஏன் கைது செய்யவில்லை?

ப: இதைத்தான் நம் மு... யில் கேட்டார்கள்; பதில் கிடைக்கவில்லையே இதற்கு!

கே: இலங்கை பிரதமர் சிறிமாவுக்கும் சீன ஜனதிபதிக்கும் என்னதொடர்பு?

ப: என்ன தொடர்போ? எனக்கு எப்படித் தெரியும்? அதெல்லாம் உயர்மட்ட (அரசியல்) இரகசியங்கள்!

ஃ

ஏ. கே. ரி. நடராஜ்,
வந்தாறுமூலை

கே: இலங்கைத் தமிழ் மக்களின் நிலைபற்றி எமது அண்டைய தமிழ் நாட்டு முதலமைச்சர் மு. க. ஏதும் நடவடிக்கை எடுக்கின்ருரா? எடுப்பாரா? இல்லையேல்...?

ப: தம்முடைய அதிகார எல்லைக்கும் சக்திக்குமுட்பட்ட நடவடிக்கைகளை அவர் எடுக்கத் தவறமாட்டார் என்பதே இலங்கை தமிழர்களின் நம்பிக்கை!

கே: நாம் எமது உரிமைகளைப் பெற முயற்சிக்கும் போது அயல் நாட்டு அரசுகள் அரசாங்கத்திற்கு உதவி செய்யுமே! அப்போது எமது நிலை என்ன?

ப: அயல்நாட்டு அரசுகள் இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தை பகைத்துக் கொள்ளும் அளவுக்கு — நிச்சயம் நடந்துகொள்ளாது என்றே நான் நம்புகிறேன்!

ஃ

நெல்லைத்தமிழரசன்,
நெல்லியடி.

கே: சமஷ்டி இன்றேல் நிச்சயம் பிரிவினையை தமிழரசுக்கட்சிகோருமா?

ப: பிரிவினை கோரிப்பெறுவதல்ல — போராடி நிலை நாட்டுவது!

ஃ

சுதந்திரதாசன்
கொக்குவில்.

கே: எனக்கு 'ஹொபி' ஒன்றும் இப்போது இல்லை. நல்ல ஒரு ஹொபியை தினபதியாரிடமிருந்து கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன். என்ன ஹொபியை அவரிடம் இருந்து கற்கலாம்?

ப: பொய்ச் செய்திகளை உருவாக்கும் முறை—துரோகம் புரிவது—கழுத்தறுப்பது — ஆளுக்காள் சிண்டு முடிவது—மாட்டிக்கொண்டால் மன்னிப்புக்கேட்பது—செய்தி என்ற வடிவத்தில் கட்டுரை எழுதுவது — போன்ற பல ஹொபிகளை நீங்கள் கற்கலாமே!

ஃ

சு. ல. வரதன்,
வல்வெட்டித்துறை.

கே: 'ஸ்ரீலங்கா' பிரதமர் சீன அரசாங்கத்திடம் இருந்து 60 கோடி ரூபா கடன் பெற்றிருப்பதன் மர்மம் என்ன?

ப: சிறிமா ஏன் கடன் பெற்ருர் என்பதைவிட சீன ஏன் கடன் கொடுத்தது என்று கேட்டிருப்பீர்களானுல் அதில்தான் மர்மமே இருக்கிறது!

ஃ

ச. தமிழ்ச் செல்வன்,
பருத்தித்துறை.

கே: இன்று திரு. அண்ணத்துரை அவர்கள் இருந்திருந்தால் ஈழத் தமிழர்களின் இன்னல் நிலையைக் கண்டு கண்ணீர் வடித்திருப்பார் என்று நான் கூறுகின்றேன் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: ஆமாம் — கண்ணீர் வடித்திடுவதைத்தவிர வேறு 'செயல்' எதிலும் ஈடுபட அவருக்கு அதிகாரம் இருந்திராதே!

ஃ

ஏ. எஸ். நாயகி,
நெளுக்குளம்.

கே: இன விடுதலைக்கு அதாவது அஹிம்சை முறையில் விடுதலை பெறுவதற்கு துணிச்சல் மிகு பெண்களின் பங்கு வாலிபர்களின் பங்கைவிட அதி முக்கியம் என்கிறேன். தங்களின் கருத்தென்ன?

ப: சுதந்திரமும் சுயமரியாதையும் உள்ளதாக ஓரினத்தை உருவாக்கும் பொறுப்பு பெண்களுடையது தான். அதனுல்தான் பாரதியும் 'வலிமை சேர்ப்பதுதாய் முலைப்பாலடா, மானம் சேர்ப்பது மனைவியின் வார்த்தைகள்' என்று கூறினுர்!

ஃ

அ. தர்மதேவா,
பண்டத்தரிப்பு.

கே: தமிழர் கூட்டணிக்கு நிதி உதவுவதென்ருல் எப்படி நிதி உதவ முடியும்? யாரிடம் நிதியை ஒப்படைக்க வேண்டும்?

ப: தமிழர் கூட்டணியின் பொருளாளர்களாக திருவாளர்கள் தா. திருநாவுக்கரசுவும், கோப்பாய் பா. உ. சி. கதிரவேற்பிள்ளையும் கடமையாற்றுகிருர்கள். அவர்களிடம் நேரடியாகவோ அல்லது 25, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

கே: அதிக நாட்களாக அடலேறு ஆலாலசுந்தரத்தின் பெயரையே காண முடியவில்லையே!

ப: ஏன், அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதமிழர் கூட்டணியின் பிரமாண்டமான கூட்டத்திலும் அவர் முழங்கியிருக்கிருரே!

ஃ

செல்வன். த. இரலிகுமார்,
புங்குடுதீவு-2

கே: கல்குடா பா. உ. தேவநாயகமும், பட்டிருப்பு பா. உ. தம்பிராசாவும், தமிழர் கூட்டணியின் பிரேரணைக்கு சாதகமாக வாக்களித்தார்களே - இவர்களைப் பற்றி என்னநினைக்கிறீர்கள்?

ப: சிங்களக் கட்சிகள் எதுவும் தமிழர்களுக்கு உதவாது என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டவர்கள் இவர்கள்!

கே: விலைவாசியைக் குறைப்போம் என்று கூறி ஆட்சிக்குவந்தனர் முக்கூட்டு ஆட்சியாளர். ஆனுல் விலைவாசியோ கூடிக்கொண்டே போகிறதே!

ப: விலைவாசி கூடினுல் என்ன? மந்திரிகளுக்கு மட்டும் வேறு பல 'வாசிகள்' கிடைக்கின்றனவே! அது அவர்களுக்கு போதாதா?

வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி
திருவாளர் குயுக்தியார்,
மே/பா சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை விரும்பிகளுக்கு வேலையுண்டு நிரம்ப!

அன்பு நண்பா,

'இந்தத் தமிழரசாரும் தமிழர் கூட்டணியினரும் வடக்கே நின்று போராட்டம் போராட்டம் என்று கத்துகிருர்களே— இவர்கள் 1958ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தை மறந்து விட்டனரா? போராட்டம் தொடங்கினுல் கொழும்பிலும் தென்னிலங்கையிலும் வாழ்ந்து வரும் தமிழர்களின் கதியென்ன? இவர்களை மீண்டும் 'பலி' கொடுக்கப்போகிருர்களா தமிழர் கூட்டணியினர்—'

—இவ்வாறெல்லாம் நாளேடுகளில் அண்மைக்காலமாக ஆளுங்கட்சி அடிவருடிகள் சிலர் ஓலமிடத்தொடங்கியிருப்பதனைக் கவனித்திருப்பாய்! இந்த ஓலத்துக்குக் காரணம் தென்னிலங்கை வாழ் தமிழர்கள் மீது இவர்கள் உண்மையிலேயே கொண்ட பற்று அல்ல — தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு எதிராக ஏதாவது உளறி ஆட்சியாளரின் 'கிருபாகடாட்சத்தை'ப் பெறுவதுதான்!

தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்களுக்கு 1958ம் ஆண்டு அடியும் உதையும் வாங்கிக்கொடுத்து அகதிகளாக கப்பலில் ஏற்றி அனுப்ப காரணமாக இருந்தவர்கள் தமிழரசார்தான்— என்ற மாற்ருரின் தீவிர பிரசாரத்தை ஊதித்தள்ளி விட்டுத்தான் தொடர்ந்து ஒவ்வொரு பொதுத்தேர்தலிலும் தமிழரசுக்கட்சியினரையே பெரும்பான்மைப் பிரதிநிதிகளாக தமிழ் மக்கள் அனுப்பி தமது விடுதலை உணர்வை நிலை நாட்டி வந்திருக்கிருர்கள் என்கின்ற அனுபவ உண்மையை இந்த அரசியல் மூடர்கள் மறந்து விடுகிருர்கள்!

உண்மையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வரும் தமிழர்களை விட, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் தாம் அதிதீவிர விடுதலை உணர்வும், உரிமைப்போரில் குதித்து, தமிழர் தன்ஞட்சியை எவ்வளவு விரைவில் நிலைநாட்டிட முடியுமோ அவ்வளவு விரைவில் நிலை நாட்டிட வேண்டும் என்கின்ற உறுதியான உள்ளமும் கொண்டிருக்கிருர்கள் என்பதை நான் அறிவேன்!

மேற்கு பாகிஸ்தானில் வாழ்ந்த 4 இலட்சம் வங்காளியருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று முஜிபுர் ரகுமான் அஞ்சியிருந்தால்— இன்று உலக வரை படத்தில் வங்காளிகளுக்கென ஒரு தனிநாடு உருவாகியிருக்க முடியுமா? வங்காளம் தனி நாடாக இன்று உருவாகி விட்டதனுல், மேற்கு பாகிஸ்தானில் வாழும் 4 இலட்சம் வங்காளிகளும் இனி தமது சொந்த நாடாம் வங்க நாட்டிற்கு திரும்பி சுயமரியாதையுடன் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பது தென்னிலங்கை வாழ் தமிழர்களுக்குத்தெரியும்!

வங்க பந்து ஷேக் முஜிபுர் ரகுமான், மேற்கு பாகிஸ்தானில் வாழ்ந்து வரும் 4 இலட்சம் வங்காளியரும், வங்காளதேசத்துக்கு வரலாம் என்று அறிவித்த நேரத்தில், அவர் கூறிய மற்ருென்றையும் இங்கு சுட்டிக் காட்டிடுவது அவசியமாகிறது.

"வங்காள தேச சுதந்திரப் போராட்ட காலத்தில், பாகிஸ்தான் அதிகாரிகளோடு ஒத்துழைத்த வங்காளிகளுக்கு வங்காளதேசத்தில் இடமில்லை. வங்காளியான பாகிஸ்தான் உப ஜனதிபதி நூருல் அமீனை வங்கதேசத்துக்கு வர விடமாட்டோம்" என்று ஷேக் முஜிபுர் கூறியிருப்பதனையே தமிழர் விடுதலைப்போருக்கு எதிராக ஆட்சியாளருடன் இன்று ஒத்துழைத்து வரும் தமிழ்த்துரோகித் தம்பிரான்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்!

இந்நாட்டில் தமிழன் எங்கு வாழ்ந்திடினும், ஒவ்வொரு தமிழனும் தமிழ் ஈழத்தில் தமிழர்க்கோர் தனியாட்சி அமைத்திடும் விடுதலைப் போராட்டத்துக்கு, தனது பூரண ஆதரவை நல்கிட வேண்டும் — அப்படி நல்கா விட்டாலும் துரோகமாவது செய்யாது இருக்கட்டும்! இப்போது துரோகம்செய்பவர்களுக்குபின்னெருகால் சுதந்திரத் தமிழ் நாட்டில் வாழும் உரிமைகூடக் கிடைக்காமல் போய்விடலாம் என்பதை இவர்கள் புரிந்துகொண்டிட வேண்டும்! இதுவெறும் வேடிக்கைப் பேச்சுமல்ல— நடக்க முடியாததுமல்ல!

கொழும்பு வாழ் தமிழர்களின் தன்மான உணர்வையும் தமிழ்ப் பேரெழுச்சியையும் சென்ற, 22-7-72ல் புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் பொதுக் கூட்டமொன்றின்போது கண்டு மெத்தமகிழ்ச்சியடைந்தேன்!

ஏ அப்பா! என்ன எழுச்சி? எவ்வளவு உற்சாகம் அங்கு கரைபுரண்டோடியது என்கிருய்? கூட்டத்தைக் குழப்புவோம் — பகிஷ்கரிப்போம்; சத்தியாக்கிரகம் செய்வோம், என்ற செஞ்சட்டைக் காடையரின் சில்லறைச் சேட்டைகளை முறியடித்திடும் வகையில் வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டமாக தலைநகரில் கூடி, தமிழர் கூட்டணியிலும், தமிழினத்தின் மீட்சியிலும், தாம் கொண்டுள்ள நம்பிக்கையையும் ஆர்வத்தைதையும் துலாம்பரமாக காட்டிவிட்டது!

'இந்தக் கூட்டத்தில் நீயும் பேசவிருப்பதாக விளம்பரம் செய்யப்பட்டதே — உன் பேச்சினைக் கேட்பதற்கென ஆவலோடு வந்திருந்தேனே — ஏன் நீ அங்கு பேசிடவில்லை— அல்லது பேச உனக்கு ஏன் வாய்ப்புத்தரப்படவில்லை?' என்று என்னை நோக்கி நீ கேட்டிடுவதை உணருகிறேன். வேறு சில நண்பர்களும் இதே கேள்வியை என்னிடம் கேட்டனர்!

நண்பா, நான் ஏன் அந்தக் கூட்டத்தில் பேசிடவில்லை — அல்லது பேசுவதற்கு எனக்கு ஏன் வாய்ப்புத் தரப்படவில்லையென்பதை இப்போது கூறமாட்டேன். நேரம் காலம், சந்தர்ப்பம் கூடிவரும்போது நிச்சயம் கூறுவேன்! உனக்கு கூருமல் வேறுயாருக்கு கூறப் போகிறேன்?

ஆனுல் ஒன்று நண்பா, மேடையில் நின்று கேட்போர் இரசித்துச் சிரித்திட சுவை சொட்டப் பேசிவிடுவதனுலோ, அல்லது அலங்கார வார்த்தைகளில் எழுதி விடுவதனுலோ கிடை

## அரசியல் மேடை

த்து விடுவதல்ல விடுதலை! நம்மை நாமே இதய சுத்தியுடன் விடுதலையென்னும் இலட்சியத்துக்கு முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்! நம் சிந்தனை, சொல், செயல், ஒவ்வொன்றும் விடுதலை இலட்சியத்தையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்க வேண்டும்!

தாயகத்தை மீட்பதென்பது இலேசான காரியம் அல்ல — ஒவ்வொரு தமிழனும் எத்துறையிலிருந்திடினும் இத்துறையில் தன் பங்கினையும் பணியினையும் செய்திட முன்வரவேண்டும்! அரசியல் நமக்கு வேண்டாம் என்று எந்த ஒரு தமிழனும் இனியும் ஒதுங்கியிருந்திட முடியாது — இது அரசியல் அல்ல — இனத்தின் மீட்சிக்கான சுதந்திரப் போராட்டம்.

வங்கதேசத்தின் விடுதலைப் போராட்டத்தில், வங்கநாட்டு அறிஞர்கள் அனைவரும் வங்க இன உணர்ச்சியுடன் தங்கள் கடமைகளை எப்படி ஆற்றினரோ அதே போல ஈழத் தமிழ் நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் தங்கள் கடமைகளை ஆற்ற இங்குள்ள தமிழ் அறிஞர்கள் அனைவரும் முன்வரவேண்டும்!

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், பொறியியலாளர்கள், பொருளாதார விற்பன்னர்கள், மதத்தலைவர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள். வணிகர்கள், — விவசாயிகள், தொழிலாளிகள் போன்ற பல்வேறு துறைகளிலிருக்கும் தமிழர்களும் ஈழத் தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு ஊன்றுகோலாக, உயிர் துடிப்பாக விளங்கிட வேண்டும். சுருக்கமாகக் கூறின், ஒவ்வொரு தமிழனும், தனது பங்கினைச் செய்திட தயக்கமின்றி முன்வந்தால் மட்டுமே விடுதலை இலட்சியம் விரைவில் கை கூடும்!

தமிழினத்திலுள்ள பொருளாதார விற்பன்னர்கள், தமிழ் நாட்டின் இயற்கைவளங்களை ஆராய்ந்து அங்குள்ள மூலவளங்களைக் கண்டுபிடித்து, இன்ன இடத்தில் இன்னது செய்யலாம் — என்று தெரிவிப்பார்களானுல், தமிழ் மக்களிடையேயுள்ள செல்வந்தர்கள் தனியாகவும் கூட்டாகவும் ஆங்காங்கே தொழில்களை துவக்கலாம்! அதன் மூனம் தமிழ் இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கலாம்!

தமிழ்நாட்டின் விவசாய நிலங்களில் நம்மவர்கள் குடியேறி கூட்டுறவு முறையிலே விவசாய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவதன் மூலம் தமிழகத்தின் உணவுப் பொருள் வளத்தை அதிகரித்திடும் அதே நேரத்தில், மாற்றினத்தாரின் ஆக்கிரமிப்பிலிருந்து நம் தமிழ் நிலத்தையும் காத்திட முடியும்!

ஈழத்தமிழ்நாடு, எல்லாவளமும் உடையது — கடல் வளம், கனிவளம், நிலவளம், நீர்வளம், தொழில்வளம் அனைத்து வளமும் உடையது — தமிழர்களிடமோ ஆற்றல் வளமும் அறிவுவளமும் நிரம்ப உண்டு. இந்த இரண்டும் இணைந்தால், தமிழ்நாடு தலைநிமிர்ந்து பொருளாதாரத் துறையில் தனது காலில் நிற்கும் தனித்துவத்தைப் பெற்றுவிடும் — இந்நிலையை அடைந்துவிட்டால் ஈழத் தமிழ் நாடு தலை நிமிர்ந்து தரணி மெச்ச வாழ்ந்திடலாம்!

ஆம் நண்பா, ஈழத்தமிழ் நாட்டின் அரசியல் ரீதியான விடுதலைப் போராட்டம் ஒரு பக்கமும், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் மறுபக்கமுமாக சமகாலத்தில் நமது இயக்கம் நடைபெற வேண்டும்! இந்தப் போராட்டத்தை ஒவ்வொரு தமிழனும், தனியாகவும் கூட்டாகவும் கொண்டு நடத்திட முன்வரவேண்டும்!

இது மட்டுமல்ல நண்பா, தமிழ் ஈழத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் அனைத்தும், விடுதலை விரும்பிகளின் கைக்குள் — தமிழர் கூட்டணியின் ஆட்சிக்குள் — வரவேண்டும். அப்பொழுதுதான் விடுதலைப் போராட்டத்துக்கு மேலும் வலுவும் பொலிவும் சேர்ந்திடும்! தமிழ் நாட்டில் ஒரு ஹர்த்தால் என்ருல், தமிழ் நாட்டிலுள்ள அத்தனை உள்ளூராட்சி மன்றங்களிலும் கறுப்புக்கொடிகள் ஓங்கிப் பறந்திடவேண்டும்! தமிழர் விடுதலைப்போரில் இத்தனை கிராமசபைத் தலைவர்கள், நகராட்சி, மாநகராட்சித் தலைவர்கள், ஈடுபட்டு சிறை சென்ருர்கள் என்பதை வெளியுலகம் அறியும்போது நமது போராட்டத்துக்கு புதிய வலு பிறந்திடுமன்ருே? தமிழர் போராட்டம் நாளை நசுக்கப்படுமானுல், தமிழர்கள் ஆயிரக்கணக்கில் சிறைக்குள் தள்ளப்படுவார்களானுல், தமிழ் நாட்டின் நாலு திசைகளிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து கண்டனக் குரல் கிளம்பிடவேண்டும். இதற்கு தமிழ் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சிமன்றங்களிலும் விடுதலை விரும்பிகளின் ஆட்சி நடைபெற வேண்டும்!

அதேபோல, தமிழர்களின் ஆதிக்கத்திலுள்ள தொழிற் சங்கங்கள், பொதுநல மன்றங்கள், சனசமூக நிலையங்கள், கலை, கலாசார நாடக மன்றங்கள், இளைஞர் இயக்கங்கள், — ஏன் மத ஸ்தாபனங்கள்கூட — இன விடுதலை உணர்ச்சியுள்ளோரின் கைகளுக்கு வந்துசேரவேண்டும்! அப்போதுதான் தமிழ் நாடெங்கும் சுதந்திர உணர்ச்சி கொழுந்து விட்டெரிவதை நாட்டுக்கு நாம் உணர்த்திட முடியும்!

தமிழர் கூட்டணி தலைவர்கள்தான் எல்லாவற்றையும் செய்திடவேண்டும் என்று நாம் எதிர்பார்த்திடுவது தவருனது; தமிழினம், தனது பூரண விடுதலையை பெற்ருகவேண்டும் என்கிற ஒரே நோக்கத்தை மையமாகக் கொண்டு அந்த இலட்சியத்தையடைய என்னென்ன செய்யவேண்டும் என்று நாம் கருதுகிருேமோ அவ்வவற்றை செய்துவரவேண்டும்! வேறு யாருக்காகவும் அல்ல—நாம் ஒவ்வொருவரும் நமக்காக — நமது பின் சந்ததி தன்மானத்துடன் வாழ்ந்திடுவதற்காக— தமிழ்த் தேசிய உணர்வுடன் இந்தப் பெரும் தேசியக் கடமையில் இறங்கியுள்ளோம் என்பதை உள்ளத்தில் வைத்துக்கொண்டு செயற்படவேண்டும்!

ஆம் நண்பா, செயல் — செயல், அது ஒன்றே இன்று வேண்டுவது. சொல்லிச்செய்ய வேண்டியவற்றை சொல்லிச் செய்வோம். பரபரப்பின்றி கூச்சலின்றி அமைதியாக செய்ய வேண்டியவற்றை அமைதியாகச் செய்வோம்! தாயக விடுதலை எனும் இலட்சியத்தை உறுதியாக நெஞ்சில் பதித்துக்கொண்டு தளராது போராட்டப் பாதையில் முன்னேறுவோம்—

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## இனம் இனத்தோடு....!

இனம் இனத்தோடு சேரும் என்பது முதுமொழி.

இந்நாட்டு அரசியலில் தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை நூற்றுக்கு நூறு வீதம் இந்த முதுமொழி உண்மையாகாவிட்டாலும் சிங்களத் தலைவர்களை, சிங்கள அரசியல் கட்சிகளை, சிங்கள மக்களைப் பொறுத்தவரை—இது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாகி வருவதை நாம் கண்டு வருகிறோம்.

தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், சிங்களத்தோடும், சிங்கள மக்களோடும் ஒத்த உரிமை வழங்கக்கூடாதென்பதிலும் தமிழ் மக்களை அடிமைகளாக, இரண்டாந்தர மூன்றாம்தர மக்களாக்கி, தனித்துவத்தை அழித்து காலப்போக்கில் சிங்கள இனத்துடன் இரண்டறக் கலந்துவிடச் செய்து, ஒரு தனி பௌத்த சிங்கள நாடாக இலங்கையை உருவாக்கவேண்டுமென்பதிலும், சிங்கள மக்கள் ஒரே கருத்துடையவர்களாக இணைந்துவிடுகிறார்கள்.

தமக்குள் ஆயிரம் கருத்து வேற்றுமைகளிருந்திடினும் ஐ. தே. கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இவ்விஷயத்தில் மட்டும் ஒரே குட்டையிலூறிய மட்டைகளாகவே காட்சி தருகின்றன.

ஆரம்பத்தில் சம அந்தஸ்து பேசிவந்த — இடதுசாரிக் கட்சிகள் என்று தம்மைக் கூறிக்கொண்ட சமசமாசக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சிகூட தங்கள் சமத்துவக் கொள்கைகளை குழிதோண்டிப் புதைத்து விட்டு இன்று இக்குட்டைக்குள்ளே வீழ்ந்து தமிழினத்தை ஒழித்துக்கட்டும் திட்டங்களைத் திட்டுவதில் முழுமூச்சுடன் ஈடுபடுவதைத் தமிழ் பேசும் மக்கள் கவனித்து வருகிறார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் வழங்கப்படுவதற்கு எதிராக முன்னணியில் நின்று விஷம் கக்குவோரில் மற்றோர் சாராரும் இருக்கிறார்கள். இவர்கள் காவியுடை தரித்த பௌத்த பிக்குகள். போதிமரத்துப் புத்தனின் ஜீவ ஒளியைப் பரப்பிடவேண்டிய இவர்கள் பச்சை இனவெறியர்களாக நாட்டில் உலா வருகிறார்கள். இவர்களது மூர்த்தண்யமான எதிர்ப்பினால்தான், பண்டா - செல்வா, ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், போன்ற தமிழ் மக்களுடன் செய்துகொள்ளப்பட்ட அரசியல் உடன்படிக்கைகள் எல்லாம் கிழித்தெறியப்படவேண்டிய சூழ்நிலை உருவாயிற்று என்பதை நாடறியும்—

இந்த இனவெறி பிடித்த சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் பௌத்த பிக்குகளுக்கும் தாம் சிறிதும் சளைத்தவரல்லர் என்பதைக் காட்டிவிட்டார். அண்மையில் இலங்கை வந்த சிங்கப்பூர் பல்கலைக்கழகத்திலுள்ள பௌத்த சங்கத்தைச் சேர்ந்த ஆனந்த மங்கள தேரோ என்ற பௌத்த பிக்கு!

இவர் இலங்கையில் காலடி எடுத்துவைத்தவுடன் கூறிய சில கருத்துக்கள், உண்மையில் வரவேற்கத்தக்கனவாக இருந்தன. அதன்பின் இங்குள்ள சிங்களத் தலைவர்களிடமும் பௌத்த பிக்குகளிடமும் ஊறிக்கிடக்கும் 'வகுப்பு வாதம்' எனும் விஷம் இவருக்கும் ஊட்டப்பட்டது போலும்! பிரதமரைச் சந்தித்துப் பேசினார்; அதன்பெறு பேருக இவருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கிடைத்தது—அதன்பின் இவரது சுருதியில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது ஆட்டுக்குட்டிக்கு எதிராக ஓநாய் கூறிய நியாயங்களை இவரும் கூறத் தொடங்கியிருக்கிறார்!

''அந்நிய ஆட்சியின்கீழ் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மீது திணிக்கப்பட்ட கொடுமைகளை உணர்ந்து தமிழ் மக்கள் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளவேண்டும்'' என்று இவர் கூறியிருக்கிறார்!

அந்நிய ஆட்சியின்கீழ் பெரும்பான்மை சிங்கள மக்கள் மட்டுமல்ல—சிறுபான்மையினத்தினரான தமிழ் மக்களும் தாம் கொடுமைப்படுத்தப்பட்டனர். அதனால்தான் சிங்கள மக்களோடு சேர்ந்து அந்நியனை விரட்டும் போராட்டத்தில் தமிழ் மக்களும் முன்னணி வகித்தனர். அந்நியன் விரட்டப்பட்ட பின்னர், அந்த இடத்தில் சிங்களவர்கள் உட்கார்ந்துகொண்டு தமிழ் மக்களை அடிமைகள்போல அடக்கி ஆள்வதைத்தான் நாம் எதிர்க்கிறோம். அந்நியன் இந்நாட்டில் காலடி எடுத்துவைக்குமுன் இருந்ததுபோல சிங்கள மக்கள் தமது பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆளட்டும்! தமிழ் மக்கள் தமது பிரதேசத்தில் தம்மைத் தாமே ஆளட்டும்; இதையே நாம் கூறுகிறோம். இதைத்தவறென்று எந்த அடிப்படையில் மங்கள தேரோ கூறுகிறார் என்று கேட்கிறோம்!

'பெருந்தன்மை' என்பது தமிழ் மக்களிடம் நிறைய இருக்கிறது, சிங்கள மக்களிடமும் சிங்களத் தலைவர்களிடமும் தான் அது கிஞ்சிற்றும் இல்லை. அப்படி அவர்களிடம் இருந்திருந்தால், இந்நாட்டில், இனமொழிப் பிரச்சினைகள் என்றோ தீர்ந்திருக்கும். எனவே 'பெருந்தன்மை' பற்றி தமது இனத்தினருக்கு மங்கள தேரோ முதலில் பாடம் புகட்டிட முன்வருவாராக!

'கறுப்புக்கொடி காட்டுவதும், கடைகளையும் பள்ளிக்கூடங்களையும் மூடி ஹர்த்தால் அனுட்டிப்பதும், பகிஷ்கரிப்பதும் சத்தியாக்கிரகமாகாது'' என்கிறார் தம்மைக் காந்தியின் சீடர் என்று பெருமையடித்துக் கொள்ளும் இந்தப் பௌத்த பிக்கு! காந்திஜியின் 'சீடருக்கு' காந்தீயப் போராட்ட முறைகள் பற்றித் தெரியாமலிருப்பது விந்தையிலும் விந்தையே!

இந்தப் பௌத்த பிக்குவைவிடக் காந்தீயப் போராட்ட முறைகள் தமிழ் மக்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழ் மக்களுக்குப் போராட்ட முறைகள் பற்றியும் யாரும் சொல்லித்தர வேண்டியதுமில்லை; 1956'ம் ஆண்டும், 1961-ம் ஆண்டும், காந்தியடிகளே பெருமைப்படக் கூடிய முறையில் அறப்போராட்டங்களை நடத்திக் காட்டியவர்கள் ஈழத் தமிழ் மக்கள்!

ஹர்த்தால், பகிஷ்காரம், கறுப்புக்கொடி, கடையடைப்பு, சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு, சுதந்திரப்பிரகடனம் அனைத்தும் காந்தீய நெறிமுறைகளுக்குட்பட்ட போராட்ட முறைகளே. தனியே உண்ணாவிரதம் மட்டும் தான் காந்தீயப் போராட்டம் ஆகாது. இதை [illegible] ஏதும் உணர்ந்து கொள்ள வேண்டும்!

சுடுபட...

''சிங்களவர்கள், தமிழர்களின் உரிமைகளை வழங்கத்தான் வேண்டும—ஆனால் பிரதேச அடிப்படையிலோ இன அடிப்படையிலோ அல்ல' என்று கூறியிருக்கிறார் இந்த பௌத்த பிக்கு!

இவருக்கு நாம் ஒன்றைக்கூற விரும்புகிறோம்—பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டுவிடாது! வடக்கும், கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகம்—என்பது வரலாறு கூறும் உண்மையாகும். இந்த உண்மையை இந்நாட்டின் இரண்டு பெரிய சிங்களக் கட்சிகளுமே ஒப்புக் கொண்டிருக்கின்றன. இப்போது கொண்டு வரப்பட்டுள்ள புதிய அரசியல் திட்டத்தில்கூட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களுடைய பிரதேசங்கள் என்பது மறைமுகமாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதைக் காணலாம்.

எனவே யதார்த்த நிலையை ஒப்புக் கொண்டு, வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆட்சிப் பொறுப்பைத் தமிழ் மக்களிடம் கையளிப்பது ஒன்றே இந்நாட்டின் இனப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கும் வழியாகும், இதைவிட வேறு எந்த வழியாலும் இந்நாட்டு இனப்பிரச்சினையை, தமிழ் மக்களுடைய பிரச்சினையை—தீர்க்க முடியாது.

இறுதியாக மங்கள தேரோவுக்கு ஒன்று கூறுகிறோம். இலங்கையில் சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்படுமானால் உண்ணாவிரதம் இருந்து உயிர் விடுவேன் என்று மகாத்மா காந்தியிடம் கூறியிருப்பதாக நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அப்படியொரு காரியத்தைச் செய்து நீங்கள் உயிரை விட்டுவிட வேண்டாம்—அநீதிக்குத் துணைபோய், ஆட்டுக்குட்டிக்கு எதிராக ஓநாயின் பக்கம் சார்ந்து நின்று நியாயம் பேசாது இருப்பீர்களானால் அதுவே மகாத்மா காந்திக்கு நீங்கள் செய்யும் மரியாதையாக இருக்கும்.

# தமிழருக்கு சலுகை வேண்டாம்! உரிமைகளே வேண்டும்!

## இ.தொ.கா. தலைவர் தொண்டமான் முழக்கம்!

'அவசியமான நேரத்தில் அதுவும்உரியசந்தர்ப்பத்தில் இன்று தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று பட்டிருக்கின்றன. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்களை அழித்தொழிக்கும் நிலைக்கு அரசாங்கம் அவர்களைக் கொண்டு வந்து விட்டது. இந்நிலையில் எந்தவொரு தமிழ் மகனும் சகித்துக் கொண்டு இருக்க முடியாது.

தமிழர் உரிமைகளைப்பாதுகாக்கவும்உரிமைகளைப்பெற்றுக் கொடுக்கவுமே தமிழர் கூட்டணி உதயமாகியது.

தமிழ் மக்களின் எண்ணத்தையும், அபிலாஷைகளையும் உணர்ந்தே இக்கூட்டணியின் அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் வலிய சென்று நாமே அதில் பங்கு கொண்டோம், கூட்டணி அமைப்பாளர்கள் அழைப்பு அனுப்புவார்கள், அதன்பின் நாம் போய்ச்சேர வேண்டும் எனக் காத்திருக்கவில்லை.

தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்த இக்கட்டான கட்டத்தில் உருவாக்கப்பட்ட கூட்டணியின் நடவடிக்கைகளில் பங்கு பற்றவும், கூட்டங்களில் கலந்து கொள்ளவும் எனது சார்பிலும், இ. தொ. கா. சார்பிலும் பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியை அனுப்பி வைத்தேன். கூட்டணிக்கு எமது ஒத்துழைப்பையும், உதவியையும் பிரதிபலிக்கக் கூடியதாக அவர் சகல கூட்டங்களிலும் உரையாற்றி வருகின்றார்.

'இந்த அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள அரசியல் சட்டம் படு பிற்போக்குத்தனமானது. தமிழ் மக்கள் அனைவரையும் அழித்தொழிக்கக்கூடியது. இதனால் இந்த அரசியல் திட்டத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதே போன்று தான் ஏனைய தமிழர் கட்சிகளும் அதனைக் கண்டிக்கின்றன. அனைவரும் அதனைக் கண்டிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் ஒற்றுமையுடன் அதனை செய்யவே கூட்டணி உருவாக்கப்பட்டது.

அரசியல் சட்டம் சம்பந்தப்பட்டவரையில் எமது கருத்தையே ஏனைய தமிழர் கட்சிகளும் கொண்டிருந்ததால் நாம் எந்தவித நிபந்தனையும் இன்றி தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்க தமிழர் கூட்டணியோடு ஒன்று சேர்ந்தோம்.

தமிழ்த் தலைவர்கள் இக்கூட்டத்தில் ஒன்று சேரா விட்டால் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யாதவர்களாக அவர்கள் மாறுவர். அத்துடன் தமிழர்களுக்கு ஆபத்தை விளைவித்தவர்களாகவே எதிர் காலத்தில் தமிழ்த் தலைவர்களை எமது இனம் கருதும்.

சலுகைகிடைக்கும் என்று எதிர்பார்த்து தமிழ்க் கட்சிகள் கூட்டணியின் மூலம் ஒன்று சேரவில்லை. தமிழ் மக்களுக்கு எந்த அரசாங்கமும் சலுகை காட்ட வேண்டியதில்லை. அவர்களின் உரிமைகளை வழங்கினால் போதும். அற்ப சலுகைகளை இனி ஏற்கக்கூடிய நிலையில் தமிழ் மக்கள் இருக்கமாட்டார்கள். உரிமைகளைத் தான் கேட்கின்றோம்.

—இவ்வாறு இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் தினசரிப் பத்திரிகை யொன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

## நடைமுறைத் தமிழியக்கத்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு கொண்டார். இக்கடிதத்துக்கு 8-5-72ல் பதிவாளர் நாயகத்திடமிருந்து பதில் கடிதம் இவருக்கு சிங்களத்தில் கிடைத்திருக்கிறது. தமிழ் மொழி பெயர்ப்பு ஆவது அத்துடன் இடம்பெற வில்லை.

தனது தமிழ்க்கடிதத்துக்கு சிங்களத்தில் பதில் வந்தது கண்டு ஆத்திரமடைந்த நடைமுறைத் தமிழியக்கத் தலைவர் 27.6.72ல் உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் பீலிக்ஸ் டயசுக்கு இதுசம்பந்தமாக ஒரு கடிதம் தமிழில் எழுதினர். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:—

''யான் பதிவாளர் நாயகத்தோடு 29.3.72ல் கடிதத் தொடர்பு கொண்டேன். அக் கடிதத்திற்கு 8-5-72 திகதியிட்ட கடிதமொன்று பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப் பெற்றேன்.

''இக்கடிதம் சிங்கள மொழியில் எழுதப்பட்டு ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுமிருந்தன. இக் கடிதத்தில் என்ன எழுதியுள்ளார்கள் என்பதை அறிவதற்கு யான் பட்டபாடு... ஒரு ஏழைத் தொழிலாளியை, அறிந்தவர்கள் தான் அறிய முடியும்.

இக்கடிதத்தை எழுதுவதிலிருந்து யான் ஒரு தமிழன் என்பதைச் சொல்லாமலே தாங்கள் புரிந்து கொள்ளுவீர்கள். எனக்கு வேற்று மொழிகளில் எவ்வித பயிற்சியுமில்லை. பயிற்சி இருக்க வேண்டும் என்ற கட்டாயமுமில்லை. அதனாலே பிறமொழிகளில், காழ்ப்புமில்லை. யான் இப்பொருள் பற்றி தொடர்பு கொண்ட கடிதங்களை பதவி அஞ்சல் வாயிலாகவும் தமிழ் மொழியிலுமே தொடர்பு கொண்டு வந்துள்ளேன். ஆனால் கௌரவ பதிவாளர் நாயகத்திடமிருந்து வந்த பதில் என்னைக் கேலி செய்வதாய் அமைந்துள்ளது என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவர பெரிதும் விழைந்தேன்.

இதுவிடயம் தங்கள் மேற்பார்வையில் இயங்கும் திணைக்களங்களில் கடமையாற்றுபவர்களிடமிருந்தே செயலுக்கு வருகின்றன என்பதை தங்களுக்கு நினைவுபடுத்தி, மேலும் இம்மாதிரியான ''தரக்குறைவான'' செயல்கள் நடைபெருவண்ணம் ஆட்சி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.''

இது விடயமாக அமைச்சரிடமிருந்து பதில் ஏதும் கிடைக்காததினால் 24-7-72 திரு இளையதம்பி மறுபடியும் நினைவூட்டற் கடிதம் ஒன்றை அமைச்சருக்கு அனுப்பி அதன் பிரதிகளை தபாலமைச்சர் குமாரசூரியர், யாழ் பா. உ. சி. எக்ஸ். மாட்டின் மற்றும் தமிழ் பா. உ. க்களுக்கும் அனுப்பியுள்ளார்.

## மட்டுநகரில் சிங்கள ஆசிரியரை நியமிக்கும் முயற்சி மீண்டும் தோல்வி!

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் சிங்கள ஆசிரியரை நியமிப்பதற்கு 'பாவாடைச்சாமி' என்ற தமிழ்த்துரோகியொருவரராலும், இன்னும் சிலராலும் எடுக்கப்பட்ட முயற்சிகள் தன்மான உணர்வு கொண்ட இளைஞர்களால் மீண்டும் முறியடிக்கப்பட்டுவிட்டன.

இவ் விஷயம் சம்பந்தமாக ஆராய்வதற்கு 22.7.72ல் கூட்டப்படவிருந்த பெற்றோர் சங்க கூட்டம் (மாணவரின் தீவிர முயற்சியால்) போதிய பெற்றோர் வரவில்லையென்ற காரணத்தால் பின்போடப்பட்டது.

இதுகாலவரை, கல்லூரி அசெம்பிளியில் பாடப்பட்டு வந்த சிங்களத் தேசியகீதம் மாணவர்களது எதிர்ப்பால் கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக தமிழ்மொழி வாழ்த்துப் பாடப்படுகிறது.

இக்கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் மாணவர்களுக்கு தமிழ் உணர்ச்சியூட்டுகிறார்கள் என்று இக் கல்லூரியில் கடமையாற்றும் இரண்டு துரோகிகள் இரகசிய பொலீசுக்கும் கல்வியமைச்சுக்கும் அறிவித்துள்ளனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வேந்திரம் பிரேரணைக்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டதா?

## யாழ். மாநகரசபை நிர்வாகம் இதைத் தெளிவுபடுத்த வேண்டும்!

ஐ. நா. மனித உரிமைப் பிரகடனத்தில் உள்ளபடி தமிழ் மக்களுக்கு ஜனநாயக மனித ஆதார உரிமைகளை வழங்கும் பொருட்டு புதிய அரசியற் திட்டத்தைத் திருத்துமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்வதாகச் சமீபத்தில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்ததல்லவா?

மேற்படி மன்றத்தில் மாநகர உறுப்பினர் கே. வி. தெய்வேந்திரனால் கொண்டு வரப்பட்ட மேற்சொல்லிய பிரேரணை ஏகமனதாக நிறைவேறியதாக தமிழ் நாளேடுகள் அத்தனையும், டெயிலி மிரர் பத்திரிகையும் அசல் தீர்மானத்தை முழுமையாக வெளியிட்டுள்ளன கடந்த வெள்ளிக்கிழமையான 14.7.72ம் திகதியன்று.

ஆனால் கொழும்பில் இருந்து, பிரபல பத்திரிகை ஸ்தாபனங்களான ஏரிக்கரை, குணசேன போன்ற நிறுவனங்களால் வெளியிடப்படும் காலைப் பத்திரிகைகளான ஆங்கில நாளேடுகள் டெயிலி நியூஸ், சண் பத்திரிகைகளோ மேற்படி பிரேரணை திருத்தங்களுடன் நிறைவேறியதாக முன்னது குறிப்பிட்டும் பின்னது திருத்தம் பற்றிக் குறிப்பிடாது பிரதமர் துதிபாடும் திருத்தம் ஒன்றையும் சேர்த்தும் 15.7.72 சனிக்கிழமை உண்மைக்குப் புறம்பான செய்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளன.

முன்கூறிய பத்திரிகைகளின் செய்திகள் திருத்தம் பிரேரிக்கப்பட்டதாகவோ, திருத்தத்தைப் பிரேரித்தவரின் பெயரையோ பற்றி ஏதும் குறிப்பிடாதநிலையில், —பிரேரணை திருத்தத்துடன் நிறைவேறியதாக ஒரு நாள் கடந்த பின் தாமதமாகச் செய்தி வெளியிட்ட பத்திரிகைகளான டெயிலி நியூஸ், சண் பத்திரிகைகள் தானும் திருத்தத்தைப் பிரேரித்தவர், ஆமோதித்தவர்களது பெயர்களுடன் திருத்தத்தையும் சேர்த்து பிரேரணையை வெளியிட்டிருக்க வேண்டும்.

அப்படியல்லாது வெறுமனே திருத்தத்துடன் பிரேரணை நிறைவேறியதாகக் குறிப்பிட்டு பிரதமர் புகழ்பாடும் ஒரு துணுக்கையும் சேர்த்திருப்பது அப்பத்திரிகை ஸ்தாபனங்களின் பொறுப்பற்ற தன்மையையே வெளிப்படுத்துகிறது.

மேற்படி தவறு வேண்டுமென்றே உற்பத்தி செய்யப்பட்டதுபோல் தோன்றுகிறது. நிருபர்கள் மட்டத்தில் கலந்துபேசி மேற்படி பொய்மை புகுத்தப்பட்டதோ அல்லது உயர்மட்டத்தில் சம்பந்தப்பட்ட செய்தி ஆசிரியர்கள் கலந்துகொண்ட உச்சி மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தால் ஏற்பட்ட விளைவானதோ மேற்படி இடைச்செருகல் என்று கேட்கத் தோன்றுகிறது.

இதில் உண்மை எது பொய்மை எது என்பதை யாழ். மாநகரசபை வட்டாரம்தான் உறுதிப்படுத்த வேண்டும்?

# சிங்கள சோசலிசத்தில் சிக்கி தடுமாறுகிறார் தமிழ் அமைச்சர்!

## சூரியருக்கு சிங்கள ஆணையாளர் கரிபூசினார்!

தமிழ் அமைச்சர் குமாரசூரியரின் அதிகாரத்தின் கீழ் இயங்கும், தபால் திணைக்களம் மூன்று ஆண்டுகளுக்கு முன் 1969 ஆம் ஆண்டு நானூறுக்கும் அதிகமான படிவங்களை மொழி பெயர்க்கும்படி அரசகரும மொழித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்திருந்தது.

தமிழ் அமைச்சரின் திணைக்களத்தின் வேண்டுகோளை தட்டிக்கழிக்க எண்ணிய சிங்கள ஆணையாளர் அபயசேகரா மொழிபெயர்ப்பு வேலை முடிய சிறிது காலதாமத மேற்படுமெனப் பதிலளித்தார்.

ஒரு ஆண்டு கடந்தும் ஓர் ஆங்கிலப் படிவத்திற்குரிய தமிழ் மொழி பெயர்ப்பும் கிடைக்காத தபாற் திணைக்களத்திற்கு, பணத்திற்கே மொழிபெயர்ப்பு செய்யலாமென மொழித் திணைக்களத்திலிருந்து திடீரெனக் கிடைத்த பதில் ஆச்சரியத்தை அளித்தது. தனியார் நிறுவனங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்குமே பணம் அறவிட்டுவந்த திணைக்களம், அரசாங்கத் திணைக்களத்திற்கு அதுவும் தமிழ் அமைச்சரின் திணைக்களத்திற்கு [illegible] ட்டை விதிக்க முனைந்தது ஆச்சரியமே. திட்டமிட்ட செயலுமாகும்.

எனினும் மொழிபெயர்ப்பிற்கு பணம் செலுத்தவும் தபால் திணைக்களமும் உடன்பட்டது.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன—மொழித் திணைக்களத்திடமிருந்து பதிலே இல்லை.

தமிழிலே படிவங்கள் இல்லை என்ற தமிழ் மக்களின் ஏகோபித்த குற்றச்சாட்டிற்கு என்ன பதில் அளிப்பதெனத் திண்டாடிய தபால் அமைச்சு இரண்டு வாரங்களுக்கு முன் மீண்டும் மொழித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டது. திடீரென—

பெரியதோர் பார்சல் தபால் அமைச்சிற்கு வந்தது தமிழிலே மொழி பெயர்த்த படிவங்கள் தான் வந்துள்ளன என ஆவலோடு அதைத் திறந்து பார்த்தார்கள் தபால் அமைச்சின் அதிகாரிகள்.

அதற்குள்ளே ஒரு கடிதம்.

'மூன்று ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த படிவங்களை தங்களுக்குத்திருப்பிஅனுப்பியுள்ளோம்.

'பணத்திற்கும் தமிழ் மொழிபெயர்ப்பு செய்ய முடியாததோடு, நீங்கள் அனுப்பிய படிவங்களில் நூற்றுக்கணக்கான படிவங்களும் காணாமல் போனதையிட்டும் மனவருத்தமடைகிறோம். மன்னிக்கவும்.

போனமச்சான் திரும்பி வந்தான் கோவணத்தோடு என்பதைப்போல அனுப்பிய படிவங்களும் அப்படியே திரும்பிவரவில்லை. அரை குறையாக திரும்பி வந்துள்ளது.

தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் கண்காணிப்பாளராக தமிழரொருவரிடத்தில் சிங்கள அதிகாரியை நியமிக்க அனுமதி அளித்த சிங்கள ஆட்சியிலே அமைச்சர் பதவி வகிக்கும் குமாரசூரியரின் இந்தத் திணைக்களத்திற்கு நடந்த இந்தச் சம்பவத்தை மூடிமறைக்க உயர் அதிகாரிகள் எடுத்த பகீரதப்பிரயத்தனம் பலிக்கவில்லை. பகிரங்கமாகி விட்டது.

---

இப்படியாக செய்வதனால் ஏதோ அவர்கள் பதவி உயர்வை எமது அரக்க ஆட்சியாளர்கள் அள்ளிக் கொடுத்து விடுவார்கள் என்ற எண்ணமோ? தெரியாது. அப்படியானால், அதுவும் பகல் கனவுதான்.

— தா[illegible]

# யாழ். வைத்தியக் கல்லூரியில் தமிழுக்குக் கதவடைப்பு!

## ஆளுங்கட்சி அடிவருடியின் அடிமைத்தனம்!

### மாணவர் குரலுக்கு வாய்ப்பூட்டு!

இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்து யாழ் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியும் குட்டிக் குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டதா? இக்கேள்வி மாணவர்கள் மத்தியில் பரவலாகக் கேட்கப்படுகிறது.

கடந்த 35 வருடகாலமாக இயங்கி வரும் கல்லூரியில் சரித்திரம் காணாத வகையில் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட ஓர் புதுமையான சத்தியப் பிரயாணப் பத்திரம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதை ஏற்க மறுத்த மாணவர்கள் தமிழ் மொழியிலே அப்பத்திரத்தை வழங்குமாறு கோரி போர்க்கொடி உயர்த்தினர்.

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப் புதல்வன், பாவம் சரியாகத் தமிழே பேசத்தெரியாத ஆங்கில தாசன் ஆளும் கட்சியின் அடிவருடி தமிழ்ப் பத்திரம் கேட்ட மாணவர்கள் மேல் பாய்ந்தது. சட்டத்தைக் காட்டி மிரட்டினர். தமிழிலே பத்திரம் வழங்க மறுத்தனர். ஆங்கிலத்தில் கையெழுத்து வைக்கத் தவறின் பாடசாலையினின்றும் கல்தா வழங்கப்படும் என்று எச்சரிக்கை செய்து அப்பத்திரத்தில் கையெழுத்தை வாங்கினர்.

தமிழினத்தின் தலை நகராம் யாழ் நகரில் நடைபெற்ற இச்சம்பவத்தையிட்டு தமிழினம் வெட்கித் தலைகுனிகிறது. வேதனை அடைகிறது.

தமிழ்மொழியை இகழ்ந்துரைத்த வடநாட்டார் தலையினிலே கல் சுமந்து வர தன்னுடு மீண்டானே சேரன் செங்குட்டுவன்.

பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் நாமும் பொங்கி யெழுவோம் என்று சபதமெடுத்தானே அன்றைய தமிழ் அரசன்.

ஆனால் இங்கு எம் தமிழ் மொழியைக் குழிதோண்டிப் புதைக்க முற்பட்டிருக்கும் குள்ள நரிக் கூட்டத்திற்கு மாணவ மணிகளே நீங்கள் கூறப்போகும் பதில் என்ன?

—"தமிழ் விளம்பி"
யாழ்ப்பாணம்.

## திரள்க தமிழ் காக்க

— துரையன் —

சோம்பிக் கிடக்கும் தமிழா! உந்தன்
சொந்த நலம்என எண்ணிவிட்டாயோ
தேம்பி அழுதிடும் தாயை — நாம்
தேறுதல் கூறும் வகைஎது? கூறு
ஆண்ட குலத்தினிற் செல்வி—இவள்
அண்டிப் பிழைப்பதை ஆற்றிட மாட்டாள்
வேண்டின் அரியணை ஏற்று—அன்றி
வீர மரணம் எனவுரைத் தாற்று.

தாயின் நிலைதன்னைப் பாராய் — நாம்
நாயிலும் கேவலம் கேவலம் சேளாய்
காலைப் பிடித்த விலங்கு — என்று
காலைவிட்டேகும் எனவே நினைந்து
நாளும் பொழுதும் அழுவாள் — நாம்
தோளும், உடலும் சுமந்துகொண்டேகி
வாளும், தலையும் கொடுத்து — ஒன்றாய்
வாழவைப்போம் அன்றி மாளுவோம் வாராய்.

சாற்று தமிழா உரையை — உன்
சாமர்த்தியத்தையே காட்டு!
போற்று தமிழாஉன் தாயை — அன்றிப்
போலிஉடம்பை ஏன் போற்றுதல் வேண்டும்
நேற்றுப் பிறந்த இனமா? — இல்லை?
நெடிய பரம்பரை வந்தவர் நாங்கள்
சோற்றையா நம்பிநாம் வாழ்வோம் — இல்லை
சோரிபி லொன்றாய்க் குதித்துத்தான் மாள்வோம்.

பாட்டும் பொருளும் பொதிந்த — எங்கள்
பைந்தமிழ் வாழும் உணர்ச்சியைப் போக்க
காட்டு மரக்கம் பென் செய்யும் — நாங்கள்
கட்ட பொம்மனின் பரம்பரை வந்தோம்
நாட்டில் இழிநிலை கண்டால் — எங்கள்
நல்ல தமிழை நசுக்குதல் கண்டால்
பார்த்துப் படுத்திடு வோமா? — இல்லை
பாசறை கட்டிப் புறப்பட்டே ஆவோம்.

# இலங்கை வங்கியில் இப்படியும் பிறவிகள்!

"இலங்கையில் வாழும் தமிழ் அரசாங்க ஊழியன் ஒவ்வொருவனும் புதிய குடியரசு தினத்தன்று, விசுவாசப்பிரமாணம் எடுக்கும் போது, 'வேறுவழியில்லை' என்ற நிலையில்தான் அதனைச் செய்வார்களே தவிர, மனவிருப்போடு அக்காரியத்தைச் செய்யமாட்டான். பற்களைக் கடித்துக்கொண்டு நெற்றியைச் சுருக்கிக்கொண்டுதான், அவன் விசுவாசப் பிரமாணத்தைப் படிப்பான்" என்று கவிஞர் காசி ஆனந்தன் அண்மையில் தனது இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டவற்றிற்கு அமையவே பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

ஆனால், அப்படித்தான் வேண்டா வெறுப்போடு பல இலங்கை வங்கித் தமிழ் ஊழியர்கள் கூட சத்தியப் பிரமாணத்தைத் தமிழிலே எடுக்கத் தீர்மானி[illegible] [illegible]திய பிரமாணப் பத்திரங்களையெல்லாம், தமிழிலே நிரப்பி அவர்கள் மேலதிகாரிகளிடம் கொடுத்த போது, அந்த மேலதிகாரிகள் அப்பத்திரங்களையெல்லாம் ''ஏன் தமிழில் நிரப்பினீர்கள்?'' என்றும், அப்படி நிரப்பப்பட்டவற்றைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறி, அவற்றையெல்லாம் ஏற்கவும் மறுத்துவிட்டார்களாம்.

இங்கு, இவையனைத்திலும் முக்கியமாகக் கவனிக்கத்தக்கதொன்றென்னவென்றால், இப்படியாக. இலங்கை வங்கித் தமிழ் ஊழியரிடமிருந்து சத்தியப்பிரமாணப் பத்திரங்களையெல்லாம் தமிழிலே ஏற்க மறுத்த அம்மேலதிகாரிகள் அனைவருமே தமிழர்கள் என்று தெரிய வரும்போது, எம் மனம் சொல்லொணாத் துன்பமும் — அதேயளவில் அவமானமும், ஆத்திரமும்தான் ஏற்படுகிறது. இதை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எம்மவர்களில் இன்றும் சிலர் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என எண்ணி மனம் மேன்மேலும் கொதிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவப் பிரஜைகளின் பிரஜாவுரிமை

## முதலில் பறி முதலாகும்!

### அடுத்து ஆபத்துப் பதிவுப் பிரஜைகளுக்கு!

பதிவுப்பிரஜைகளைஇரண்டாந்தர சந்தேகப் பிரஜைகளாகப் புதிய அரசியல் திட்டம் ஆக்கிவிடும் என்பதை அரசியற்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் எடுத்துக் காட்டின. நவீன திரிபுவாதிகளினதும், முதலாளித்துவ சோசலிசவாதிகளினதும் கூட்டு அரசாங்கத்தின் கவனத்திற்கு இவை வரவில்லை. பதிவுப் பிரஜைகள் தமிழர்கள். அவர்களின் உரிமையைப் பூரணத்துவப்படுத்த இந்த நாட்டின் நவீன திரிபுவாத ஏகாதிபத்தியவாதிகள் முன்வரமாட்டார்கள் என்பது புதுமையல்ல. தமிழினத்தை மிகவும் மோசமாகச் சீரழிக்கும் இந்த அரசியற் திட்டத்திலுள்ள "பதிவுப் பிரஜைகளின் பதிவுகளை நீக்கும் அதிகாரத்தை அரசியற்திட்டம் நடைமுறைக்கு வந்து ஒருமாதமாகுமுன் அரசாங்கம் நடைமுறைப்படுத்த முன் வந்துவிட்டதுபோல் தெரிகின்றது.

கௌரவப் பிரஜைகளாகப் பதியப்பட்டவர்களின் பதிவுகளை ஆராய்ந்து தேவை ஏற்படின் இரத்துச் செய்யுமாம் அரசாங்கம். இன்று கௌரவப் பிரஜைகளின் குடியுரிமையில் கைவைக்க முன்வந்துள்ள அரசாங்கம் நாளை இந்திய பாக்கிஸ்தானிய சட்டத்தின் கீழ் குடியுரிமை பெற்றோரினதும், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி குடியுரிமை பெற்றோரினதும் பதிவுகளை ஆராய்ந்து இரத்துச்செய்ய முன்வரக்கூடும்.

அப்பொழுது மலையக மக்களின் தலைவரென அரசாங்கத்திற்குப் பாதம் தாங்கும் அப்துல் அசீஸ், வீ. எஸ். ராஜா, எஸ். நடேசன், இரா. சிவலிங்கம் போன்றோர் கதியும் அதோகதிதான்.

இந்த மிலேச்சத்தனமான நாகரிக உலகம் வெட்கித் தலைகுனிகின்ற குடியுரிமையைப் பறிக்கும் சரத்தை உள்ளடக்கிய அரசியற்திட்டம் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான மலையகத் தோட்டத் தமிழரின் மனிதரின் மனித உரிமைகளுக்குச் சாவுமணியாகும், தென்னாபிரிக்காவையும், தென்றொடீசியாவையும்மிஞ்சிவிட்டநாடாக இலங்கையை உலக நாடுகள் கணித்துக்காறிஉமிழும்நாள் வெகு தூரத்திலில்லை என்பதை ஆட்சியாளருக்கும் கூறி வைப்பது எமது கடமையாகும்.

**மலையகத்திலே........**

## தோட்டப் பாடசாலைகள் பிரச்சினை

### தொண்டமான் அதிருப்தி!

தோட்டப் பாடசாலைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்த சந்தர்ப்பமளிக்கவேண்டுமெனக் கோரி கடந்த மார்ச்சு மாதம் 16-ம் திகதி கல்வி மந்திரி டாக்டர் பதுதீன் மொகமட் அவர்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் எழுதியுள்ள கடிதத்துக்கு கல்வி மந்திரி மௌனம் சாதித்திருப்பதைக் குறித்து திரு. தொண்டமான் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 13-ம் திகதி கல்வி மந்திரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தோட்டக் குழந்தைகளின் கல்வியை உதாசீனப்படுத்துவதாக கல்வி இலாகாமீது திரு. தொண்டமான் குற்றம் சுமத்தியுள்ளார். தமது குழந்தைகளின் சுபீட்சவாழ்வுக்கான வாய்ப்புகள் எலாவற்றையும் இழந்து நிற்கும் ஒரு சமூகத்தினரின் பிரச்சினைகளை மனிதாபிமான முறையில் மதிக்கத் தவறியதின் விளைவே கல்வி இலாகாவினதின் மௌனம் என்றும் திரு. தொண்டமான் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மறுக்கப்பட்டுள்ள கல்வி வசதிகள் அவர்கள்மத்தியில் பெரும் அதிருப்தியை உருவாக்கி இருப்பதை சுட்டிக்காட்டிய திரு. தொண்டமான் கூடிய விரைவில் இ. தொ. கா.வோடு இணைந்து இந்நிலைக்கு நிவாரணம் காண கல்வி இலாகா நடவடிக்கை எடுக்கத் தவறினல், இப்பிரச்சினை தோட்டப் பகுதிகளில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தலாம் என்றும் எச்சரித்துள்ளார்.

(9ம் பக்கம் பார்க்க)

## மாதச் சம்பளமும் சேவைக்காலப் பணமும்

மலையகப் பாட்டாளிகளுக்கு ரூ. 90/- மாதச் சம்பளம் வாங்கித் தருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் சொல்லித் திரிந்தார்களே இப்பொழுது வேலை நேர மாற்றம் கோரி தங்களது போராட்டத்தை திசைதிருப்பியிருக்கின்றார்களே என்றால் அவர்கள் (இ.தொ.கா.) தங்கள் மாதச் சம்பளக் கோரிக்கையை கைவிட்டு விட்டார்களா? என்று அரசாங்க சார்புள்ள தொழிற்சங்கங்கள் சில கவலை தெரிவித்துள்ளதாக அறியவருகின்றது.

தொழிற்சங்கத் துறையில் பாட்டாளிகள் இன்று அனுபவித்து வரும் எல்லாச் சலுகைகளும் இ. தொ. கா. வினல் வாங்கிக்கொடுக்கப்பட்டதென்பதை அவர்கள் (அரசாங்க சார்புள்ள தொழில் சங்கங்கள்) நன்கறிவார்கள்.

### முதற் குரல்

இந்நாட்டிலே தினக்கூலியாக ஒரு புறத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மலையகப் பாட்டாளிச் சமூகத்திற்கு மாதச் சம்பளம் ரூ 90/- கொடுக்கப்பட வேண்டுமென்று எழுப்பிய முதல் குரல் எங்கள் இ.தொ.கா. குரல். இக்குரலை கேட்க சகிக்காத அரசாங்க சார்புள்ள தொழிற் சங்கங்கள் எல்லாம் ஒன்று கூடி, குப்பையைக்குழப்பி பாட்டாளிகளை குழிதோண்டிப் புதைக்க வேண்டுமென்ற ஒரு குறைமதியால் ரூ. 142/90 மாதச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு குரலை கிளப்பினர்கள்.

நடை முறையில் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்றவிதத்தில் எவரையும் பாதிக்காத முறையில், தர்ம நியாயமான அடிப்படையில் ஒரு கோரிக்கையை கேட்பது ஒரு விதம்.

அந்நியச் செலாவணிக்கு பெரும் சிக்கல் அரசுக்கு ஏற்பட்டிருப்பதை அறிந்திருந்தும் அரசாங்கச் சார்புள்ள தொழிற் சங்கங்கள் 142/90 கேட்கின்றன என்றால் அது எதனைக் காட்டுகின்றது?

### கையாலாகாத்தனம்

பாட்டாளிகளுக்கு உண்மையிலேயே ரூ. 142/90 வாங்கிக் கொடுக்கப்பட வேண்டுமென்ற வைராக்கியத்திலேயா அவர்கள் இத்தொகையைக் கேட்கின்றார்கள்? தலைவர் திரு. தொண்டமான் ரூ. 90/- கேட்கின்றார். ஆகவே நாமும் எதையாவது கேட்டு வைப்போம் என்றகையாலாகாத்தனத்தில் கேட்கப்பட்ட ஒரு கோரிக்கையே அவர்களது 142/90.

அன்று தலைவர் தொண்டமான் 10 சத சம்பள உயர்வும் அதனைத்தொடர்ந்து 30 சத சம்பள உயர்வும் வாங்கிக்கொடுத்தபோது, பரிகாசம் செய்தவர்களும், பழித்துக்கூறியவர்களும் தான் அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும், அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பவர்களாகவும், அரசாங்கத்தைக் கட்டிக்காப்பவர்களும் இருக்கின்றார்கள்.

### இவர்களுக்கு முடியாதா?

நீண்ட நெடு நாட்களாக பாட்டாளி வர்க்கத்தினருக்கு அரிய பெரிய நன்மைகளைச் செய்யவே பிறவி எடுத்துள்ளதாகச் சொல்லித் திரிந்த இவர்களுக்கு, இன்று சட்டத்தின் மூலம் பாட்டாளிகளுக்கு பல அநுகூலமான, ஆக்கபூர்வமான நன்மைகளைச் செய்யக்கூடிய அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாட்டு நன்மையைக் கருதி இரவோடிரவாக சட்டங்கள் இயற்ற இவர்களுக்கு அதிகாரம் இருக்குமென்றால், அரசியல் உரிமையும், குடியுரிமையும் இழந்துள்ள பாட்டாளி சமூகத்திற்கு அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஒரு சில சட்டங்களை உருவாக்க இவர்களுக்கு முடியாதா என்ன?

பாட்டாளிகளுக்கு 142/90 கொடுக்க இவர்கள் கூடிப் பேசவேண்டிய அவசியமில்லை தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய அவல நிலை இவர்களுக்குத் தேவையில்லை.

சுண்டுவிரல் அசைவிலே ஒரு சட்டத்தை கொண்டு வந்து ரூ. 142/90 மட்டுமல்ல, பற்பல பயன்தரத்தக்க நன்மைகளைப் பாட்டாளிகளுக்குச் செய்யலாமே. செய்தார்களா இதுவரை? செய்வார்களாஇனிமேலும்? இடதுசாரி தொழிற் சங்கத் தலைவர்கள் இன்று தேசிய அரசப் பேரவையில் முக்கிய அமைச்சர்களாக இருக்கிறார்கள். ஐ. தொ. கா. தலைவர் ஜனப் அஸீஸ் நியமன எம்: பியாக வீற்றிருக்கின்றார். பிரதமர் கூட ஒரு தொழிற் சங்கத்திற்குப் போஷகராகவிருக்கின்றார். இதுபோக எத்தனையோ தொழிற் சங்கங்கள் அரசாங்கத்திற்கு அவ்வப்போது விசுவாசம் தெரிவித்து பயபக்தியோடு நடந்துகொண்டிருக்கின்றன. ஆயினும், 142/90 இன்னும் அமுலுக்கு வரவில்லை. சட்டம் அவர்கள் கையில் இருக்கும்போது யோசனை எதற்கு?

**எம். எஸ். செல்லச்சாமி**
**பொதுச்செயலாளர்**
**இ. தொ. கா.**

### பல காரணங்கள்

இ. தொ. காவின் கோரிக்கை ரூ. 90/—ஆக இருக்கும் போது அவர்கள் எதற்காக 142/90 ஐ முன்வைத்தார்கள் என்றால் அதற்குப் பல காரணங்கள் உண்டு.

பெறமுடியாத ஒற்றைக் காட்டி பெறக்கூடிய ஒன்றை பெறமுடியாமல் செய்து பேர்பெற்றுவிடலாம் என்ற அவர்களின் எண்ணத்தை நாமறிவோம். இ. தொ. காவைவிட பன்மடங்கு அதிகச் சம்பளம் கேட்டவர்கள் நாங்கள் என்று பெருமையடித்துக் கொள்வதற்கும், இ. தொ. கா. தனது கோரிக்கையில் வெற்றியடைந்து ஒரு ஒப்பந்தத்தைஏற்படுத்தி விட்டால், நாம் ரூ. 142/90 கேட்டிருக்க, இ. தொ. கா. 90/—க்கு சம்மதித்துவிட்டதென்று வழக்கம் போல் எம்மீது வசைபாடுவதற்குமே அவர்கள் 142/90 கோரிக்கையை ஏற்படுத்தினர்கள்.

ரூ. 90/—மாதச் சம்பளக் கோரிக்கை மீது ஒரு போராட்டம் நாம் ஆரம்பிக்கையில், ரூ. 142/90 நாம் கேட்கும் போது எதற்காக ரூ. 90/—க்கு ஒரு போராட்டம்? என்று பிரச்சாரம் செய்யவும் எமது முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு பாட்டாளிகளின் போராட்டத்தைமுறியடிக்கவும் அவர்கள் கையாளும் ஒரு நரித்தந்திரம் என்றால் மிகையாகாது.

அரசாங்க ஆதரவுள்ள அவர்கள் ரூ. 142/90 ஐ வாங்கிக் கொடுப்பதை விடுத்து, இ. தொ. கா. வேறொரு போராட்டத்தில் இறங்கிவிட்டதா? மாதச் சம்பளக் கோரிக்கையை இ. தொ. கா. கைவிட்டு விட்டதா? என்றெல்லாம் கேள்விகளைத் தொடுப்பது வேடிக்கையும் விண்புரளியுமாகும்.

### சட்ட பூர்வ உரிமை

வயோதிபர்களுக்கு சேவைகாலப்பென்சன் வழங்குவதில் ஒரு திட்டவட்டமான கொள்கை 1957 வரை கடைப்பிடிக்கப்படவில்லை.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1957-ல் கிளாப்போக்கிலே ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பித்து அப்போராட்டத்தை அடுத்து தொழில் நீதி மன்றத்தில் வழக்காடி, பெற்ற அந்த தீர்ப்பின் அடிப்படையில் வயது சென்ற தொழிலாளர்களுக்கு மாதப் பென்சன் பெறக்கூடிய ஒரு சட்டபூர்வமான உரிமையைப் பெற்றுக்கொடுத்தது.

ஆனல், 1964-ல் தோட்ட முதலாளிமார் மாதப் பென்சன் வழங்குவதை நிறுத்தி மொத்தப்பென்சன் திட்டத்தைக் கொண்டு வந்ததோடு, ஆண்டொன்றுக்கு ரூ. 25/- வீதம் மொத்த சேவைகாலத்தைக் கணக்கிட்டு, சேமலாப நிதியை (முதலாளி போட்ட பணத்தையும், தொழிலாளி போட்ட பங்கையும்) கழித்துக்கொண்டு பென்சன் வழங்கினர்கள். இதனை இ. தொ. கா. பலமாக ஆட்சேபித்து 1967ல் முதலாளிமாரோடு ஒரு கூட்டு ஒப்பந்தத்தை செய்து கொண்டது. இந்தக் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் முதலாளி போடுகின்ற சேமலாப நிதியை மட்டும் கழித்துக் கொள்ளவும், தொழிலாளியின் சேமலாப நிதியை கழிக்காமல் வழங்கவும், தாயகம் செல்பவர்களுக்கும், தோட்டத்தை விட்டுச் செல்பவர்களுக்கும் மொத்தமாகவும் கூடுதலாகவும் தங்கள் சேவை கால பணத்தைப் பெறவும் இ. தொ. கா. வழி வகுத்தது. இ. தொ. கா. வின் கூட்டு ஒப்பந்தத்தால் தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமாக சேவைகாலப் பணம் கிட்ட வழியேற்பட்டது. இடையில் இவ்வொப்பந்தத்தை புதுப்பிக்கவும், புதியதோர் ஒப்பந்தம் உருவாக்கவும் இ. தொ. கா. சகல நடவடிக்கைகளையும் எடுத்து வந்தது. இ. தொ. கா-வின் நியாயமான கோரிக்கைகளுக்கு முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவிக்க மறுக்கவே, 1971 செப்டம்பரில் கூட்டு ஒப்பந்தத்தை இ. தொ. கா. ரத்துச்செய்தது.

### கடமையாற்ற உறுதி!

அத்துடன் நிற்காமல் ஒரு வருட சேவைக்கு ஒரு மாதச் சம்பளம் தொழிலாளிக்கு சேவைகாலப் பணமாக வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து போராட முனைந்தது. இந்த அடிப்படையில் தொழில் தகராறு நீதி மன்றங்களில் வாதாடி பல நல்ல தீர்ப்புகளையும் பெற்றுள்ளது. கூட்டு ஒப்பந்தம் அமுலில் இருந்தபோது, அவ்வொப்பந்தம் பாட்டாளிகளுக்கு பெருத்த அளவில் கிடைக்கவேண்டிய நன்மைகளுக்கு முட்டு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மக்களின் மனச்சாட்சிக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளவுக்கு ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் புதிய நகர மண்டபத்தின் உள்ளும் புறமுமாக திரண்டிருந்தனர். இக்கூட்டத்தை நடத்த விடாமல் குழப்ப சில துரோகிகள் செய்த சதிகள் தன்மானத் தமிழ் மக்களால் முறியடிக்கப்பட்டன.

## செல்வா பேச்சு

கூட்டத்துக்கு தந்தை, செல்வா தலைமை தாங்கினார். அவர் பேசுகையில் கூறியதாவது:—

''தமிழினத்தின் உரிமைகளை, அரசியல் சட்டத்திலிடம் பெறச் செய்வதற்கு அரசியல் நிர்ணய சபையில் நாம் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை. அரசாங்கம் தமிழ் மக்களின் குறைந்தபட்ச உரிமைகளை கூட அங்கீகரிக்க மறுத்துவிட்டது. இதனால் தமிழினத்தின் சுயமரியாதையை காப்பாற்றவும், தமிழருக்கு விரோதமான அரசியலமைப்பை உருவாக்குவதற்கு தமிழர் பிரதிநிதிகளும் உடந்தையாக இருந்தார்கள் என்ற அவப்பெயர் வராமலிருக்கவும், அச்சபையிலிருந்து நாங்கள் வெளியேறினோம்.

இப்போது தமிழர் கூட்டணி ஆறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறது. இந்த ஆறு கோரிக்கைகளையும் செப்டம்பர் 30ம் திகதிக்குள் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொள்ளா விட்டால் சாத்வீகமான முறையில் போராடுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

'இந்த நாட்டுக்கு சோல்பரி அரசியல் திட்டம் புகுத்தப்பட்ட 1947ம் ஆண்டிலிருந்து ஈழத் தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமையைக்கோரி வந்திருக்கிறது. அதே கோரிக்கைக்காக தொடர்ந்து போராடுவோம்.'

## ஆனந்தசங்கரி

திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது:-

'செப்டம்பர் 30ம் திகதிக்கிடையில் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படாவிட்டால் போராட்டம் என்று அறிவித்துவிட்டோம் போராட்டத்துக்கான திட்டங்கள் எல்லாம் தயாராகிவிட்டன. தமிழ் பேசும் மக்கள் இனி சிங்களப் பகுதிகளில் வாழ முடியாது. கொஞ்சம் கொஞ்சமாக, தங்கள் சொத்துக்களையும், உடமைகளையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு திருப்ப வேண்டும். தமிழர் கூட்டணி முன்பே சொல்லவில்லையென்று பின்னர் நீங்கள் யாரும் குறை கூறக்கூடாது. இப்போதே கூறுகிறோம் — வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் திரும்புங்கள். தமிழ் பகுதியிலேயே உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். தமிழ் இலங்கையை வளமாக்க உழையுங்கள்.

'தமிழர் கூட்டணியின் மூலம் இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவோம். தமிழர் கூட்டணிக்கு வெளியே நிற்கும் சுயாட்சிக் கழகத் தலைவர் நவரத்தினத்தையும் கூட்டணிக்கு வருமாறு அழைக்கிறேன்—'

## நாவலர் பேச்சு

தளபதி, நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:—

''தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்துக்கு முதல் தேவையானது ஒற்றுமை. இந்த ஒற்றுமை இன்று கூட்டணி மூலம் ஏற்பட்டு விட்டது. இந்த ஒற்றுமையை உடைத்தெறிந்து, மீண்டும் தமிழ் மக்களை கூறுபோட அரசாங்க அடிவருடிகளும், வேறு சில விஷமிகளும் இன்று மும்முரமாக நிற்கின்றனர். இந்த விஷமிகளின் வாலைத் தமிழினம் ஒட்ட நறுக்கவேண்டும். தமிழின ஒற்றுமையை மேலும் வலுவாக்கிட கூட்டணியில் சேருமாறு நண்பர் வி. நவரத்தினத்தை இரு கரம் கூப்பி அழைக்கிறேன். தமிழினத்துக்கு பேராபத்து சூழ்ந்துள்ள வேளையில் கட்சிக்கு ஆள் சேர்க்கும் வேலையில் திரு. நவரத்தினம் ஈடுபடுவது 'வெட்கக்கேடு!

புதிய அரசியல் திட்டம், கொண்டு வரப்பட்டதன் ஒரே நோக்கம், தமிழர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அழித்தொழிப்பதே, சிறுபான்மை மக்களுக்கு ஒரேயொரு பாதுகாப்பாக முந்திய அரசியல் சட்டத்தில் இருந்த 29வது சரத்தை இல்லாமற் செய்வதற்காகவே புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்ட தென்பதை அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வாவே பகிரங்கமாகக் கூறிவிட்டார்.

மதத்தை அபின் என்றார் கார்ள்மாக்ஸ். ஆனால் அவரது சீடர்கள் என்று கூறிக்கொள்வோர் இன்று இலங்கையில் கொண்டு வந்துள்ள மத சார்பான அரசியல் சட்டத்தைக்கண்டு, நிச்சயம் தனது கல்லறையிலிருந்து கார்ள்மாக்ஸ் கண்ணீர் வடிப்பார்!

புதிய அரசியல் சட்டத்தில் தமிழுக்கு அணுவளவு உரிமையும் கிடையாது. இருப்பதாக பத்திரிகைகளிலும், வானொலியிலும் அரசும் அமைச்சர்களும் கண்துடைப்பு அறிக்கை விட்டு மக்களை ஏமாற்ற முனைகிறார்கள். நீதிமன்றத்தில் தமிழில் பதிவுகள் வைக்கலாம் என்றார்கள்; ஆனால் அடுத்த கணமே யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்கு சிங்கள தட்டச்சுக்களும் குறிப்பெழுத்தாளர்களும் அனுப்பப்பட்டுவிட்டனர்.

''தமிழர் கூட்டணி தனது ஆறு அம்சக்கோரிக்கையை பிரதமரின் சமூகத்திற்கு சமர்ப்பித்து அவகாசமும் கொடுத்துள்ளது. இந்த அவகாசம் ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல — எங்களுக்கும் தான். நாங்கள், முக்கியமாகத்தென்னிலங்கையில் வாழும் நீங்கள் போராட்டத்திற்கு ஆயத்தமாக வேண்டும். அதற்காகவே இந்த அவகாசம்!

''எமது ஆறு அம்சக் கோரிக்கையை அரசு ஏற்காதென்பது எமக்குத்தெரியும் — அதை ஏற்காவிட்டால் அக்டோபரில் தமிழர் கூட்டணி தனது போராட்டத்தை தொடங்கும். போராட்டத்தின் முடிவு எப்படியிருக்கும் என்பதை உலக சரித்திரத்தைப் படித்தவர்கள் அறிவார்கள்.

''வங்க பந்து முஜிபுர் ரகுமான், ஆறு அம்சக் கோரிக்கையை வைத்துப் போராடினார். பாகிஸ்தானை பிளவுபடுத்துவது அவரது நோக்கமாக இருக்கவில்லை. ஆனால் அவரது ஆறு அம்சக் கோரிக்கைகளை யாகியாகான் ஏற்க மறுத்து உரிமைக்குப் போராடிய வங்க மக்களை கொன்று குவித்து, சொல்லொணாக்கொடுமைகளுக்கு அவர்களை ஆளாக்கியபடியால்தான் சுதந்திர வங்க தேசம் பிறக்கவேண்டிய நிலை அங்கு ஏற்பட்டது.

''அஹிம்சை வழியிலேயே நமது போராட்டம் அமையும். எப்பாடு பட்டாவது என்னத்தை செய்தாவது இந்நாட்டில் தமிழ் மக்களின் சுதந்திரத்தை அடைந்தே தீருவோம். பொறுத்தது போதும்—பொங்கியெழுந்து போராடுவோம்''

## எம். எஸ். செல்லச்சாமி

இ. தொ. கா. செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி உணர்ச்சிகரமாக பேசும்போது கூறியதாவது:

''இன்று தமிழர் கூட்டணியின் குரல் இலங்கைவாழ் முப்பது இலட்சம் தமிழ் மக்களின் ஒருமித்த குரலாக ஒலிக்கிறது. இந்தக் குரலுக்கு அரசு செவிசாய்த்திடவேண்டும். இன்றேல் விளைவு விபரீதமாக முடியும்.

''வடக்கான், கிழக்கான், மலையகத்தான் என்று தமிழ் மக்களை கூறுபோட்டு பிரித்துவைத்த காலம் இன்று மலையேறிவிட்டது. இன்று தங்கள் உரிமைகளைக் காக்கத் தமிழினம் ஓரணியில் ஒன்றுதிரண்டுவிட்டது. இந்த ஒற்றுமையை — வீர உணர்ச்சியை எந்த சக்தியாலும் அழித்துவிடமுடியாது.

''உரிமைகோரும் மக்களின் எதிர்ப்பை எந்தக் கொடுமையான சட்டத்தாலும் ஒழிக்கமுடியாது. இதை உலக நாடுகளின் வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது, கூட்டணி பா.உ.க்கள் தேசிய பேரவைக்கு சென்றது ஒருபோதும் சரணகதியாகாது. உள்ளும்புறமும் போராடவும், எமது குரலை உலக நாடுகளுக்கு எட்டவைக்கவுமே இவர்கள் தேசியப் பேரவைக்கு சென்றுள்ளனர் தேசியப் பேரவையிலிருந்து வெளியேறுவதால், எமது போராட்டம் மேலும் சக்திபெறுமென்ற கட்டம் வருமானால், நிச்சயம் இவர்கள் அச்சபையை பகிஷ்கரித்து வெளியேவந்து களத்தில் குதிப்பார்கள்.

''இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியில் 85 சத வீதத்தை சேமித்துக் கொடுப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்களான மலையகத் தமிழர்கள்தாம். இந்த மக்களின் குடியுரிமை மொழியுரிமைகளை வழங்காமல், இந்த நாட்டில் யாரும் சுலபமாக ஆட்சி நடத்த முடியாது என்பதை நமது போராட்டத்தின்மூலம் நிரூபித்துக் காட்டுவோம்—

''இலங்கையின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் எமது மொழி இனம், இரத்தம் எல்லாம் ஒன்றுதான். எமக்குள் கட்சிப் பூசல்கள், அரசியல் போட்டிகள் இருக்கலாம். ஆனால் இன்று எல்லாவற்றையும் மறந்துவிட்டோம். உரிமைப்போரில் குதிக்க தமிழ் இளைஞர்கள் தயாராகிவிட்டனர்.

''மலையகத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையையும் முன்வைத்தே தமிழர் கூட்டணி இன்று போராட்டத்துக்கு தயாராகிவருகிறது. எனவே மலையகத் தமிழர் பிரச்சினையில், தமிழரசுக் கட்சியுடன் கொண்ட கருத்து வேறுபாடு காரணமாகவே, அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி அமைத்ததாகக்கூறும் திரு. வி. நவரத்தினம், தமிழர் கூட்டணியில் சேர்வதற்கு எவ்வித தடையுமில்லையே! அவரையும், வெளியே நிற்கும் விடுதலை உணர்ச்சியுள்ள சகலரையும் கூட்டணிக்கு வரும்படி இருகரம் நீட்டி அழைக்கிறேன்—''

## உடுப்பிட்டி சிவா

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது:-

''கடந்த 22ம் திகதி குடியரசு தினத்தன்று தமிழ் இளைஞர் காட்டிய எழுச்சி போல இலங்கைச் சரித்திரத்தில் என்றுமே நடைபெற்றதில்லை. தமிழ் வாலிபர்கள் வீறுகொண்டு எழுந்துவிட்டனர். தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தில் குதிக்க இன்று அவர்கள் தயாராகிவிட்டனர். இளைஞர்களின் எழுச்சியை அடக்க யாராலும் முடியாது.

ஹர்த்தால் போராட்டத்தையடுத்து 70 தமிழ் வாலிபர்களை கைதுசெய்து கேள்வி முறையின்றி மாதக் கணக்காக சிறையிலடைத்து வைத்திருக்கிறார்கள் ஆட்சியாளர்கள். இப்படிச் செய்வதன் மூலம் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம் என்று ஆட்சியாளர்களை எச்சரிக்கிறேன். நாளைக்கு நாம் போராடுங்கள் என்று ஆணையிட்டாலும், போராட்டத்தில் ஈடுபட்டு சிறைசெல்ல யாழ்ப்பாணத்தில் மட்டும் 7000 வாலிபர்கள் தயாராக இருக்கிறார்கள்.

''சிறையில் வைத்திருக்கும் வாலிபர்களை விடுதலை செய்யுங்கள் — அல்லது நீதிமன்றத்துக்கு கொண்டுவந்து வழக்குத் தொடருங்கள்! அப்படி வழக்குத் தொடருவீர்களானால், அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதை நீதிமன்றத்தில் நாங்கள் நிரூபித்துக் காட்டுவோம்!''

—கூட்டத்தில் திருவாளர்கள், சி. கதிரவேற்பிள்ளை பா. உ. ஆர். என். சிவப்பிரகாசம், எஸ். தம்பித்துரை, புலவர் திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றினர்.

# தமிழா! விடுதலைக்குப்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

படையில் நின்று போராடுவது... இம் மூன்று வழிகளிலும் தமிழினம் மூன்றாவது வழியைத்தான் கடைப்பிடிக்கவேண்டும். அந்த வழிதான் உரிமையைப் பெறும் வழி உலக அறிஞர்கள் பலரும் கையாண்டு வெற்றி கண்ட வழி.

எந்த விடுதலை இயக்கங்களிலும் கருத்து வேறுபாடு இருக்கலாம். இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவர்களான நேருஜி, நேதாஜி போன்ற தலைவர்களுக்கும் காந்தியடிகளுக்கும் கூட கருத்து வேறுபாடு இருந்திருக்கின்றது. இறுதியில் காந்தி காட்டிய வழியே முடிவானதாக இருக்கும். அதே போல செல்வா காட்டும் வழியே நமக்கும் முடிவானது.

### கொல்வின் குத்துக்கரணம்

சோவியத் நாட்டு அரசியலமைப்பைப் பற்றியும் அங்கு பரந்து வாழும் பல்வேறு மொழி பேசுவோர்க்கெல்லாம், எப்படி உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளதென்பதைப்பற்றியும் முன்பு ஒரு கட்டுரை வாயிலாக எழுதிய கொல்வின் அத்தகைய ஒரு அமைப்பு இங்கு உருவாக வேண்டுமென்றார். அதே கட்டுரையை நான் நாடாளுமன்றத்தில் வாசித்தபோது அதைத் தான் எழுத வில்லையென்று மறுத்தார். எங்கே மூலப் பிரதி என்று கேட்டார். அதையும் சமர்ப்பித்தேன். இத்தகைய குத்துக்கரணம் அடிப்பவர்களால் எமது இனத்தைப் பாதுகாக்க முடியுமா? எனவே தான் இன்று தமிழர் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டணி மூலமே எமது உரிமைகளைப் பெற்றுவிட முடியும்.

தமிழா! நீ ஒரு காலத்தில் ஆண்ட இனம்! இன்று நீ ... வாழ்கின்றாயே உனது வீரம் எங்கே? விவேகம் எங்கே? இந்தக் கடைசி வேளையிலாவது ஒன்றுபட்டு உனது இனம் சுதந்திர இனமாக மாற வழி அமைக்க மாட்டாயா? இவ்வாறு கேட்டு திரு. இராசதுரை தனது உரையினை முடித்துக்கொண்டார்.

அடுத்து அடலேறு மு. ஆலாலசுந்தரம் பேசும்போது கூறியதாவது:- யார் குத்தினாலும் அரிசிதான் தேவை என்பதைப் போல தமிழ் மக்களின் பிரச்சினைகளை எந்தக் கட்சியாவது முன்வந்து தீர்த்துவைக்கட்டும். இதற்கு நாம் குறுக்கே நிற்கப்போவதில்லை. எமது இலட்சியம் தமிழினம் சுதந்திரம் பெறவேண்டுமென்பதுதான். இதற்காகவே நாம் கூட்டணியை அமைத்தோம். இந்நாட்டில் பரந்து வாழும் இஸ்லாமியரும் தமிழரே. தமிழினத்திற்கு ஒரு துன்பமென்றால் அது இஸ்லாமியருக்குந்தான் சாரும். இஸ்லாமியருக்கு ஒரு துன்பமென்றால் அது முழுத் தமிழினத்துக்குமே கேடாகும். அவ்வளவு தூரம் இரு பகுதியினரும் பின்னிப் பிணைந்திருக்கும்—பிட்டும் தேங்காயும் போல, இணைந்து வாழும் நாம் எமது இழந்த உரிமைகளையும் ஒன்றுபட்டு நின்று பெறுவோம். தமிழ் மக்களிடமிருந்து முஸ்லிம் மக்களைப் பிரித்தெடுத்து அதனால் அரசியல் இலாபம் தேடும் சதி முயற்சிகளுக்கு நாம் இடமளிக்கக்கூடாது.''

# பண்டத்தரிப்பில் பகிரங்கக் கூட்டம்

பண்டத்தரிப்பு ஜூலை 25, தமிழர் கூட்டணியின் பகிரங்கக் கூட்டம் ஒன்று 30-7-72 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் பண்டத்தரிப்பு ஐயனார் ஆலய வடக்கு வீதியில் அமைந்த திறந்த வெளியரங்கிலே நடைபெறவுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாண தமிழர் கூட்டணித் தலைவர்கள் பலரும் இப்பொதுக்கூட்டத்தில் பங்குபற்றுவர். திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கான சகல ஏற்பாடுகளையும் பண்டத்தரிப்பு ''தமிழர் கூட்டணி வாலிப முன்னணியைச் சேர்ந்த செல்வன் பொன். கனககுலசிங்கம் மேற்கொண்டுள்ளார்.


## யோகாசனப் படங்கள்

யோகாசனப் பயிற்சி விளக்கப் படங்களையும் யோகக்கலை என்ற புத்தகத்தையும் பெற விரும்பும் சன சமூக நிலையங்கள், பொது மன்றங்கள், பாடசாலைகள் ஆகியன, தங்கள் நிலைய அத்தாட்சிக் கடிதங்களைக் கொடுத்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'தமிழா! விடுதலைக்குப் போராடத் துடித்தெழு!'

## யாழ். கோட்டை மைதானத்தில் இராசதுரை, ஆலாலு போர் முரசு!

யாழ் கோட்டை மைதானக் கூட்டத்தில் மட்டுநகர் முதல்வர் திரு. செ. இராசதுரை பேசுகையில் கூறியதாவது:-

''ஈழம் வாழ் தமிழ் பேசும் இனம் ஒன்று பட வேண்டும். ஒரே குரலில் உரிமைக்காக வாதாட வேண்டும் அப்பொழுது தான் அவர்கள் இழந்த உரிமைகளைப் பெற முடியும். அதை விடுத்துப் பல கோணங்களிலும் நின்று குரல் எழுப்புவதினால் பயனேதுமேற்படப் போவதில்லையென்ற குறையொன்றுதான் கடந்த காலத்தில் தமிழ் மக்களிடையே நிலவி வந்தது. இன்றோ இந்த அவல நிலை மாறிவிட்டது. ஒரு புதிய சகாப்தம் தமிழரிடையே உருவாகி விட்டது. இந்த நல்ல தருணத்தைப் பயன் படுத்தி சிற்றலாக வெளியில் நிற்கும் தமிழர்கள் பலரும் ஒன்றுபட்டு ஒரே குரலெழுப்ப வேண்டித்தான் தமிழ் மக்களிடையே ஒரு கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

''தமிழினம் ஒன்று பட்டதற்கு முதலில் அரசுக்கே நன்றி கூற வேண்டும். தமிழினத்தைப் பிளவு படுத்துவதன் மூலமே தங்களது திட்டங்களை நிறைவேற்றி விடலாமென்று தப்புக் கணக்குப் போட்டார்கள். சிறுபான்மையினத்திற்கு இருந்த அற்ப சொற்ப பாதுகாப்புக்களையும் பறித்தெடுத்து குடி



யரசினைக் கொண்டு வந்தார்கள். சிங்களக் கெடுபிடியின் காரணமாகவே இன்று தமிழர்கள் ஒரே பணியில் திரண்டார்கள்.

உலகம் தொடங்கிய காலத்திலிருந்து மனிதன் தன்னைத்தானே உணராத வரையில் அடிமைகளாகத் தான் வாழ்ந்தான். ஆனால் இன்று மனிதன் சிந்திக்கத் தொடங்கி விட்டான். மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்து அவனது விடுதலை உணர்ச்சிகளை எந்தச் சக்தியாலும் அடக்கி விட இயலவில்லை.

### முஜிபுரும் ஜின்னாவும்

இன்று வங்காள தேச விடுதலையைப்பற்றி சிந்திக்கின்றோம். அது எப்படி எதனால் உருவாகியது என்பதை விடுதலை யுணர்வு படைத்தவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாகிஸ்தானின் சிற்பியான ஜின்னா அவர்கள் தமது மொழியான உருதுவிற்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தினால் தான் அங்கு— சேக் முஜிபுர் ரகுமான் தோன்ற வேண்டிய நிலையேற் பட்டது. வங்காள மக்களின் விடுதலை யுணர்ச்சியை எப்படியாவது அடக்கி விடவேண்டுமென்று காலத்திற்குக் காலம் பாகிஸ்தானை ஆட்சி புரிந்தமொழி வெறியர்கள், கையாண்ட செயல்கள்தான் இறுதியில் வங்காள விடுதலையை உருவாக்கித் தந்தது.

மொழியுணர்வென்பது இலேசான தொன்றல்ல... இன்று உலக வரலாற்றை எடுத்துக்கொண்டால் மொழியைத் தங்கள் உயிருக்கு மேலாக மதித்துத் தான் தங்களைத் தாங்களே தியாகம் செய்திருக்கின்றார்கள்.



''ஈழத் தமிழினத்தின் மத்தியிலே இன்று புதியவொரு எழுச்சி உருவாகி விட்டது. விடுதலையுணர்வு படைத்த இளைஞர் சமுதாயத்தின் எழுச்சியை எந்தச் சக்தியாலும் அடக்கி விட முடியாது. எந்த நாட்டிலும் இளைஞர் சமுதாயம் விழிப்படையவில்லையென்றால் அந்த இனம் காலப்போக்கில் அழிந்துவிடும். எமது (தந்தை) தர்மர் காட்டிய பாதையிலே கடந்த 25-ஆண்டு காலமாக நாம் ஒரே பணியில் செல்கின்றோம். இன்று உருவாகியுள்ள கூட்டணியிலும் எமது கட்சி ஓரங்கமாக இருந்துகொண்டு பணியாற்றும். கேள்விக்குறியாகமாறி நின்று எம்மை எதிர்ப்பவர்களெல்லாம் மிக விரைவிலே ஆச்சரியக் குறியாக மாறி எம்மோடு இணைவார்கள். தமிழினத்திற்கு பிடித்த நோயைத் தீர்க்கும் பொறுப்பை இத்தலைமுறையினராகிய நாம் அடுத்த தலைமுறையிடம் — இளைஞர்களிடம் ஒப்படைத்து விட்டோம். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாதென்று கூக்குரல் போட்டவர்கள் இன்று வாயடைத்து நிற்கின்றார்கள்.

### காந்தி அண்ணல் காட்டிய வழி

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது காந்தியடிகள் முஸ்லிம்களைப் பார்த்துச் சொன்னார், நான் பாகிஸ்தானைத் தருவேனென்று! சொன்னவர், செயலிலும், அதை சாத்வீகம் என்ற ஆயுதத்தினாலேயே பெற்றெடுத்தார்.

இன்று ஈழத் தமிழ் மக்கள் மத்தியிலே மூன்று வழிகள் உள்ளன. ஒன்று— அரசாங்கம் செய்வதை அப்படியே ஆமாம் சாமி போட்டு ஏற்றுக்கொள்வது...இரண்டு —பலாத்கார வழிகளைக் கையாண்டு போராட்டம் நடாத்துவது... மூன்று—அற வழியிலே சாத்வீக அடிப்

(7-ம் பக்கம் பார்க்க)

# மாணவ சமுதாயம் விழித்தெழ வேண்டும்!

## ஒற்றுமை கெடுப்போரை விரட்டிட வேண்டும்!

சில தினங்களுக்கு முன்னர் 'தமிழர் கூட்டணியை நம்பிப்பயனில்லை' என்னும் தலையங்கத்துடன் வரும் செய்தியை ஒரு மாணவர் தினபதியின் முதற்பக்கத்தில் வரச் செய்திருந்தார். இச் செய்திக்கு முதலிடமளித்த பெருமை தினபதி ஆசிரியரையே சாரும். இம்மாணவர் கொடுத்த உண்மையான செய்தியை இரட்டிப்பாக்கி ஏதோவெல்லாம் உளறித்தள்ளியிருக்கிறார் தினபதி ஆசிரியர். இவர் இச் செய்தியில் குறிப்பிட்டிருந்த சில விடயங்களைப் பற்றி, எனது சிற்றவுக்கு எட்டியவரை, ஆராயலாமென நினைக்கிறேன்,

தமிழர் கூட்டணியினரை நம்பாத இவர் எக் கூட்டணியினரை நம்பப்போகின்றார்? தற்போது ஆட்சியிலிருக்கும் கூட்டணியினரையா? முடியாது! ஏனெனில் அநீதி இழைப்பவர்களே அவர்களாயிற்றே! அல்லது! ஐக்கிய தேசியக் கட்சியினரையா? மௌனமாகவல்லவா அவர்கள் இருக்கின்றார்கள். இன்றல்ல, நேற்றல்ல, கடந்த 25 வருடங்களாக, தமிழர்களுக்கு அநீதியிழைக்கப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம், பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் தொடர்ந்து போராடி வந்ததும், போராடி வருவதும், இலங்கைத் தமிழரசுக் கட்சியென்பதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியுமா?

பாராளுமன்றத்திலோ, அல்லது வெளியிலோ சமத்துவ வாதிகளோ, அல்லது சோசலிச கம்யூனிச வாதிகளோ, இதுவரை இதுபற்றி ஏதும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுண்டா?

தமிழர் கூட்டணித் தலைவர்கள் ஒருபொழுதும் தமது பதவிகளைத் துறப்பதாக முடிவு செய்திருக்கவில்லை. தமிழர் கூட்டணியினரில் வெறுப்பும், பொறாமையும் கொண்ட சிலரே தமிழரில் தமக்கு அக்கறையிருப்பதாகக் காட்டிக் கொண்டு, பாராளுமன்றப் பிரதிநிதிகளே உங்கள் பதவிகளைத் துறவுங்கள், பகிஷ்கரியுங்களென்று கூக்குரலிட்டு வந்ததும், அதைத் தினபதியார் கொட்டையெழுத்துக்களில் பிரசுரித்து வந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

தமிழர்கூட்டணி நடவடிக்கைக் குழு 26.5-72இல் கோப்பாய் பிரதிநிதி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களின் இல்லத்தில் கூடிய போது, தொடர்ந்து தேசியப்பேரவையைப் பகிஷ்கரிப்பதில்லையென ஏகமனதாகவே தீர்மானித்திருந்தார்கள். இதில் மாணவ பேரவைத் தலைவர்களின் சம்மதமுமிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

குடியரசு தினத்தை 3நாட்கள் பாடசாலை செல்லாது பகிஷ்கரித்தோமே! நீங்கள் ஏன் பாராளுமன்றத்தைத் தொடர்ந்து பகிஷ்கரிக்கவில்லையென அங்கலாய்க்கின்றார் இம்மாணவர். 3 நாட்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்த நீர் ஏன் தொடர்ந்து பகிஷ்கரிக்க முடியவில்லை? தொடர்ந்து முற்றாக பாடசாலையைப் பகிஷ்கரித்திருக்கலாமே? உம்மால் முடியவில்லை. காரணம் நாம் தொடர்ந்து இதே நாட்டில் வாழவேண்டியவர்களாக இருக்கின்றோம். இங்குள்ளவற்றை யெல்லாம் பகிஷ்கரித்துவிட்டு வேறு நிலைமையில் சென்று வாழக்கூடிய நிலைமையில் நாமில்லை. தேசியப் பேரவை உறுப்பினர்கள் மாத்திரம், பகிஷ்கரிப்பதன் மூலம், புதிய அரசியலமைப்பில் ஒரு மாற்றத்தைக் கொணடு வந்துவிட முடியுமா?

இங்குள்ள மக்களெல்லாம் புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு விசுவாசப் பிரமாணம் எடுத்து தொடர்ந்து அரசாங்க உத்தியோகங்களிலிருக்கும்போது, பேரவை உறுப்பினர்கள் மாத்திரம் பகிஷ்கரிப்பதன்மூலம் நாம் எதைச் சாதித்து விடமுடியும்? இந்நாட்டில் பேரவை உறுப்பினர்கள் மாத்திரம் தானா ஆட்சியில் பங்கு பற்றுகிறார்கள்? ஜனநாயக நாட்டில் மக்கள்தான் ஆட்சியில் நேரடியாகப் பங்கு பற்றுகிறார்கள்.

நாங்கள் யாவரும் அரசாங்கத்திற்கு விசுவாசமளிக்க மறுத்து எங்கள் அரசாங்க உத்தியோகங்களையும், பாடசாலைகளையும் நிரந்தரமாகப் பகிஷ்கரிக்க முடியுமா? முடியாது! ஏன் நாங்கள் இந்நாட்டிலேயே தொடர்ந்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம். இந்நாட்டில் ஏற்படுத்தப்படும் சட்டங்களை நாம் எதிர்க்காலம், ஆட்சேபிக்கலாம், குறை கூறலாம், எமக்கும் பிடியாமலிருக்கலாம் ஆனால் அவற்றின்கீழ் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகுகின்றோம்.

முன்பொரு தடவை தந்தை செல்வா அவர்கள் Daily mirror பத்திரிகைக்கு விடுத்திருந்த செய்தி ஞாபகத்திற்கு வருகின்றது. "Though we Object to our language laws as unjust we have to live in this country and therefore have to put up with those laws." ''அரசாங்கத்தின் மொழிச்சட்டம் நீதியற்றதென நாம் எதிர்த்தாலும், இந்த நாட்டில் வாழவேண்டியவர்களாயிருப்பதால் அவற்றுடன் ஒத்துப் போகவேண்டியவர்களாக இருக்கின்றோம்.''

சிலர் கூறுவதுபோல பதவிகளைத் துறந்துவிட்டு, மீண்டும் இடைத்தேர்தலில் போட்டியிடுவதென வைத்துக்கொள்வோம். மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கம், பேரவைக்குச் செல்வதாயிருப்பதால், பேரவையைப் பகிஷ்கரிக்கும் குறிக்கோளே இதில் தவிடுபொடியாகி விடுகின்றது. மீண்டும் தேர்தலில் நில்லாவிடில் இங்குள்ள சில எட்டப்பர் கூட்டம் பேரவைக்குச் செல்ல வழிவகுத்து, அரசாங்கத்துக்கு அடிவருடும் கூட்டங்களின் எண்ணிக்கையைக் கூட்டிவிட ஏதுவாகிவிடும். ஆகவே இங்கு இருதலைக் கொள்ளி யெறும்பின் நிலையைப்பார்க்கின்றோம்.

அண்மையில் கூடிய நடவடிக்கைக்குழு, 1972ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 30ம் திகதிக்கிடையில் இவர்கள் சமர்ப்பித்திருந்த ஆறு அம்சக் கோரிக்கைகளுக்கேற்ப அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படாவிடில் போராட்டத்தில் இறங்குவதெனத் தீர்மானித்துள்ளது குறப்பிடத்தக்கதாகும். பாராளுமன்றத்திற்கு வெளியே மாத்திரமல்ல, உள்ளேயும் வேலையிருக்கின்றதென்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஆகவே, இளைஞர்களாகிய நாம், தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகளைப் பொறுத்திருந்து பார்த்து, அவற்றிற்கு நமது ஆதரவைக் கொடுத்து, அவசரப்பட்டு, தீர ஆலோசனை செய்யாது, சில தவறான, பொய்யான பிரச்சாரங்களுக்குச் செவி சாய்க்காது, நம்மிடையே வளர்ந்து வரும் ஒற்றுமைக்குப் பங்கமேற்படாமல், மென்மேலும் ஒற்றுமையை வளர்க்க அரும்பாடுபட வேண்டுமென்று எல்லோரையும் மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

நா. இந்திரன்,
(இறுதி வருடப் பொறியியல் மாணவன்,)
இல. 5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## மாதச் சம்பள...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டையாக விருக்கின்றது என்று எதிரணிதொழிற் சங்கங்கள் குறை கூறினார்கள். ஆனால் இன்று ஒப்பந்தம் ரத்துச்செய்யப்பட்டு விட்டது. அன்று ஒழுங்காகக் கிடைத்த சேவை காலப் பணத்திற்கு இன்று கோடேறி வாதாடி, வழக்குப் பேசி அவதிப்படவேண்டியுள்ளது. இன்று ஆட்சி பீடத்தில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் அன்று அங்கம் வகித்த ராஜநாயகம் கமிஷனின் சேவைகால சிபார்சுகள் என்னவாயிற்று? ஏன் அமுலாக்கப்படவில்லை. என்ன காரணம்? இன்று குப்பைக் கடையில் தூக்கியெறியப்பட்டு விட்டது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால், 24 மணித்தியாலத்திற்குள் பல சட்டங்களை பாட்டாளிக்கென உருவாக்கப்போவதாக மார் தட்டிப் பேசியவர்கள், இன்று மந்திரிப் பதவி வகித்துங் கூட கேவலம் ராஜநாயகம் கமிஷன் செய்த சேவைகால சிபார்சுகளைத் தானும் அமுலாக்க முடியாமல் விழிக்கின்றார்கள். நம்நிலை அப்படியல்ல. கடந்த முப்பதாண்டு காலம் பாட்டாளிகளின் உயர்வுக்காக பல அரிய சட்டங்கள் உருவாக பாடுபட்டோம். இன்னும் இனிமேலும் அவர்களின் மேம்பாட்டுக்காக கடமையாற்ற உறுதி கொண்டுள்ளோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(20)

## காட்டு யானையுடன் நடந்த 'ஓட்டப் போட்டி!'



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

மாமல்லபுரத்தின் எழிலார்ந்த காட்சிகளைக்கண்டு களித்திட வாசகர்களை அழைத்துச்செல்வதாக கூறிவிட்டு கடந்த வாரம் உங்களையெல்லாம் ஏமாற்றிவிட்டேன். காரணம், மாணிக்க கங்கையாற்றங்கரையிலமர்ந்திருக்கும் அழகன் முருகன் ஆலயத்துக்கு சென்ற கிழமை நான் சென்றிருந்ததால், கட்டுரையை எழுதுவதற்கு எனக்கு நேரம் கிடைத்திடவில்லை.

கதிர்காமத்திலுள்ள திருமுருகன் ஆலயத்துக்கு ஒரு தடவை செல்ல வேண்டுமென்று என் துணைவி நீண்டகாலமாகவே 'நச்சரித்து' வந்திருக்கிறாள். நானும் போவோம் போவோம் என்று 'கடத்திக்' கொண்டே வந்திருக்கிறேன்.

ஆண்டவன் குடியிருக்கும் கோவில்களைச் சுற்றுவதைவிட, ஆண்டவன் குடியிருக்கும் கோவிலாக நமது இதயத்தை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். ஆண்டவன் குடியிருக்கக்கூடிய அளவுக்கு நமது இதயங்களைச் சுத்தமாக வைத்துக்கொண்டால், ஆண்டவன் நமது இதயங்களிலேயே குடியமர்ந்து விடுவான் என்பதே என்னுடைய நம்பிக்கையாகும்.

சின்ன வயதிலிருந்தே எனது கடவுள் நம்பிக்கை தனிப்போக்கானது. வெறும் சம்பிரதாயங்களுக்காக நடைபெறும் சமயச் சடங்குகளை எனது மனம் ஏற்பதில்லை. சட்ட திட்டம், கட்டுப்பாடு இவைகளுக்குட்பட்ட கடவுள் வழிபாட்டை நான் ஒப்புவதில்லை. 'அண்ணாத்துரையின்' புத்தகங்களைப் படித்து இவன் 'கெட்டுப்' போகிறான் என்று அந்நாட்களில் என் உறவினர்கள் பலர் என் தந்தையிடம் முறையிடுவதுண்டு. ஆனால் எனது தந்தையோ என் மீது அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் அவர் என் சுயேச்சையான, சுதந்திரமான எண்ணங்களுக்கு தடைவிதிக்க எப்பொழுதும் முனையவில்லை. மாறாக தட்டிக்கொடுத்து அவற்றை வளர்த்தார்.

அண்ணாவின் நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்கு முன்னரே, கடவுளைப் பற்றிய எனது சிந்தனை ஒரு புதிய வடிவத்திலேயே இருந்தது. ஆனால் அதே நேரத்தில் கடவுளே இல்லை என்ற நாத்தீக வாதத்தையும் நான் என்றும் ஒப்புக்கொண்டதில்லை.

ஆத்திகர்கள், மதவாதிகள் பின்பற்றும் சம்பிரதாய வைதீக சடங்கு முறைகளையும், மூடநம்பிக்கைகளையும் நான் எப்படி வெறுக்கிறேனோ, அதே போலவே நாத்திகர்களின் முறைகளையும் நான் வெறுக்கிறேன்.

மூடத்தனமான ஆத்திகமும் தவறானது; மூடத்தனமான நாத்திகமும் தவறானது — இந்த இரண்டு எதிர்முனைகளுக்கும் நடுவில் நின்று எனக்குள்ளே ஆண்டவனை வணங்கி வருபவன் நான்.

அப்படிப்பட்டவன், கதிர்காமம் செல்ல வேண்டும் என்ற என் மனைவியின் 'நச்சரிப்பை' தட்டிக் கழித்ததில் ஒன்றும் ஆச்சரியமில்லையே! அப்படியே கோவிலுக்கு சென்று ஆண்டவனை வணங்குவதென்றாலும், யாருமில்லா நேரத்தில் தனியே சென்று அமைதியாக வணங்குவதையே நான் எப்பொழுதும் விரும்புபவன்.

இருந்த போதிலும், என் மனைவி கேட்ட ஒரேயொரு கேள்வியால் கதிர்காம யாத்திரையை மேலும் ஒத்திப்போட முடியவில்லை. ''ஒருவேளை அடுத்தடுத்த ஆண்டுகளில் கதிர்காமத் திருவிழாவுக்குப் போகவேண்டுமென்றால் 'பாஸ்போட், விஸா' எடுக்க வேண்டியேற்பட்டால் என்ன செய்வது? ஆகவே இந்த ஆண்டு திருவிழாச் சமயத்தில் ஒரு தடவை போய்வந்து விடுவோமே' என்றார்.

மனைவியின் இந்தக் கேள்வியும் என்னைச் சற்றுச் சிந்திக்க வைத்தது. எனவே கதிர்காமத்துக்கு சென்று திரும்புவது என்று முடிவெடுத்து சென்ற வார இறுதியில் அங்கு சென்று வந்தேன்.

மருத மரங்களுக்கிடையே மருதம் வேர்களைக் கழுவிக்கொண்டு சல சல வென்று ஓடிவரும் மாணிக்க கங்கையின் ஜில்லென்ற குளிர்ந்த நீரில் குளிப்பது உள்ளத்துக்கும் உடம்புக்கும் உண்மையில் ஒரு தனி இன்பம்தான்! மெல்லிய காற்று உடலை தழுவிச் செல்லும் போது நமக்கு ஏற்படுகின்ற சுகமும் அமைதியும் இருக்கிறதே அதை அனுபவித்து உணர முடியுமே தவிர வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத ஒன்று.

கோவை-மகேசன்

முருகன் அருளோ, மருதம் வேர்களின் மருத்துவ வலிமையோ நான் அறியேன் — கதிர்காமத்தில் நிற்கும் போது எனக்கு ஏற்பட்டிருந்த 'பீனிச' நோய் எப்படி மறைந்தது என்பது ஆச்சரியமானதே.

பக்திமார்க்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வந்த கதிர்காமத்திருத்தலம், இப்போது பக்தர்களைக் கவரும் தலமாக மட்டுமன்றி ஓர் '' உல்லாசபுரி '' யாகவும் மாறிவருவதனைக் கண்டு உண்மையில் வேதனைப்பட்டேன். கேளிக்கையும், படாடோபமும் டாம்பீகமும் நிறைந்த இடத்தில் 'பக்தி' தோன்றுவதற்குரிய வாய்ப்புமறைந்துவிடுகிறது.

'ஹிப்பி' ஸ்டைலில் காணப்படும் இன்றைய இளைஞர்களும் யுவதிகளும் உல்லாசத்துக்காக கதிர்காமம் வருவது மட்டுமன்றி — புனிதமான காவடி ஆட்டத்தையும் 'பைலா டான்ஸ்' அளவுக்கு கேவலமாக்கி விட்டிருப்பதையும் கதிர்காமத்தில் கண்டேன்

மற்றொன்றையும் கதிர்காமத்தில் கவனித்தேன் — கடவுள் பெயரைச் சொல்லி 'பிஸ்னெஸ்' பண்ணும் அயோக்கியத்தனம்தான் அது. கண்ட கண்ட இடத்தில் எல்லாம் குட்டிக்குட்டிக் கோவில்கள் பல இப்போது முளைவிட்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் காணிக்கை போடும்படி மக்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். [illegible] உள்ள இடங்களிலேயே இத்தக் [illegible] நடைபெறுவதையும் கவனித்தேன்.

உதாரணத்துக்கு ஒரு சின்ன உதாரணம் சொல்லுவேன். ஆலயத்துக்கு பக்தர்கள் செல்வதன் நோக்கம் மனதை ஒரு நிலைப்படுத்தி ஆண்டவனை வழிபடுவதே. ஆனால் செல்லக் கதிர்காமத்துக்கு நீங்கள் சென்றால் ஒரு ரூபா கொடுத்ததும் உங்களுக்கு 'மோட்சம்' கிடைத்துவிடும்! ஆச்சரியப்படாதீர்கள்!

செல்வக் கதிர்காமத்தில் நிம்மதியாக ஆண்டவனைவழிபட விரும்பி அங்கு செல்லும் பக்தர்கள் நிச்சயம் ஏமாந்து போவார்கள்—காரணம் பிள்ளையார் கோயிலுக்கு எதிரே இருக்கும் மலையிலிருந்து ஒலிபெருக்கி ஒன்றை வைத்து மூச்சு விடாமல் கத்திக்கொண்டிருக்கிறார்கள் சிலர் பணம் வசூலிப்பதற்காக! யாராவது ஒருரூபா கொடுத்தால் போதும்—அதை ஒலிபெருக்கியில் சொல்லி, இன்னார் ஒரு ரூபா தந்திருக்கிறார் —அவருக்கு மோட்சத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மூச்சு விடாமல் கத்துகிறார்கள். பௌத்த பிக்குகளின் ஆதிக்கத்திலேயே இது நடைபெறுகிறதென்று பின்னர் அறிந்தேன். ஒரு ரூபா கொடுத்தவுடன் மோட்சம் என்றால் இது எவ்வளவு பெரிய மோசடி! இப்படிப்பட்ட ஏமாற்றுப் பேர்வழிகளினாலேயே நாத்திகவாதம் உலகில் வளர்கிறது.

கதிர்காமப் பயணத்தில் நான் என் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவம் ஒன்றையும் பெற்றேன். இப்போது நினைத்தாலும் திகிலூட்டும் சம்பவம் அது.

செல்லக்கதிர்காமம்நோக்கி நானும் என் மனைவியும் மற்றோர் நண்பரும் சென்றுகொண்டிருந்தோம். பஸ் மூலம் செல்வதற்கு வசதியிருப்பினும், தனிமையான காட்டுப் பாதையினூடாக நடந்து செல்வதையே நான் விரும்பினேன். அதனால் இருபக்கமும் அடர்ந்த காடு சூழ்ந்த குறுகலான காட்டுப் பாதை வழியே செல்லக் கதிர்காமம் நோக்கி சென்றுகொண்டிருந்தோம். இந்தக் காட்டுப் பாதை வழியே மக்கள் செல்வது இப்போது குறைந்து விட்டதால், பல இடங்களில் பாதையை மூடி செடியும், கொடியும், புல் பூண்டும் முளைத்திருந்தன. ஒருவாறு பாதை தவறாது சென்று கொண்டிருந்தோம்!

திடீரென்று காட்டுக்குள் ஒரு பக்கத்திலிருந்து சலசலப்பு சத்தம். குரங்கொன்று மரமொன்றிலிருந்து தொப்பென்று கீழே வீழ்ந்தது. அடுத்தகணம்...!

இரண்டு காட்டு யானைகள்-தாயும் குட்டியும் - காடே கிடுகிடுக்கும்படி பிளிறிக்கொண்டு காட்டுக்குள்ளிருந்து நாம் சென்றுகொண்டிருந்த பாதைக்கு ஓடிவந்தன.

எமக்கோ என்ன செய்வதென்றறியாத நிலை. நாம் சென்ற பாதையிலிருந்து ஒரு சிறு திருப்பம். அத்திருப்பத்திற்குள் ஓடி மறைந்தார் கூடவந்த நண்பர். அவர் பின்னால் ஓடிய என் மனைவி, நான் அத்திசையில் திரும்பாமல் நேர்ப்பாதையில் சென்றதைக் கண்டதும் என்னோடு ஓடிவர எத்தனித்தாள். நல்லவேளையாக எப்படியோ கால் தடுக்கி, நிலத்தில் குப்புற வீழ்ந்துவிட்டாள்.

அதோ காட்டு யானை... கோபாவேசத்துடன் வருகிறது—என் மனைவி வீழ்ந்து கிடந்த இடத்துக்குப் பக்கத்தாலேயே ஓடிவருகிறது; என் நெஞ்சு திக் திக்கென ஒரு கணம் அடித்துக்கொள்கிறது. ஒரு அடி தள்ளி யானை காலை வைத்திருந்தால் அதன் கால்களுக்குள் என் மனைவி சிக்குண்டிருப்பாள்!

யானையிடமிருந்து என் மனைவிக்கு ஆபத்து ஏதும் ஏற்படவில்லையென்பதையும், யானை என்னைத்தான் துரத்திவருவதையும் கண்டுகொண்ட நான் ஓடினேன்—ஓடினேன்— ஓடிக்கொண்டேயிருந்தேன். பின்னால் யானையும் துரத்திக்கொண்டே வந்தது.

யானையுடன் எவ்வளவு தூரத்துக்குத்தான் ஓடமுடியும்? ஓடிவந்த நான், மிகவும் களைத்துவிட்ட நிலையில் திரும்பிப்பார்த்தேன். என்ன ஆச்சரியம்? யானை என்ன நினைத்துக்கொண்டதோ, குட்டியுடன் பாதையிலிருந்து விலகி காட்டின் மறுபக்கத்துள் ஓடி மறைந்தது.

யானையிடம் சிக்கியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை இப்போது நினைத்தாலும் நெஞ்சம் பதறுகிறது!

கூடவந்த நண்பர் சொன்னார்:- ''நீங்கள் தமிழுக்காகவும், தமிழினத்துக்காகவும் உங்களையழித்துக் கொண்டு பாடுபட்டுவருகிறீர்கள். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன், முத்தமிழை வாழவைக்கப் பாடுபடும் உங்களை காப்பாற்றாமல் விடுவானா? உங்கள் இலட்சியமும் நோக்கமும் வெற்றிபெறுவதற்கு முருகன் எப்போதும் உங்களுக்கு துணையிருப்பான்— உங்களுக்கு வரும் எந்தப் பெரிய ஆபத்தையும் துடைத்தெறிவான் என்பதற்கு யானையிலிருந்து நீங்கள் இன்று மீண்ட இந்தச் சம்பவம் ஒன்றே போதும்.''

ஆம், இது எனது வாழ்வில் என்றுமே மறக்கமுடியாத சம்பவமாகிவிட்டது. எனது முயற்சிகளுக்கும் தொண்டுக்கும் தெய்வத்தின் ஆசியும் உண்டென்பது இச்சம்பவத்தின்மூலம் பிரத்தியட்சமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது.

ஒரு பெரும் 'கத்தி'லிருந்து மீண்ட நான், அடுத்த வாரம் மீண்டும் வாசகர்களை தமிழ் நாட்டின் நாட்டின் கலைக்கூடமான மாமல்லபுரத்திற்கு அழைத்துச் செல்கிறேன்.

—வளரும்.

### தோட்டப்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

...இப்பிரச்சினைக்கு நிவாரணம் காணுவதற்காகவே தங்களிடம்பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பமளிக்க வேண்டுமெனக் கோரியிருந்தேன். இக்கோரிக்கைக்கும் அரசாங்கம் செவிசாய்க்காது தோட்டக் குழந்தைகளின் கல்வியை தொடர்ந்தும் உதாசீனப்படுத்துமானல், அதனல் ஏற்படப்போகும் கொந்தளிப்புகளுக்கும், விளைவுகளுக்கும் கல்வி இலாகாவே பொறுப்பாகும்.''

## அண்ணா உன் மீது ஆணை!

—தமிழ் - ஆனந்தன்—

குற்றமென்ன செய்துவிட்டாய் ஆள்வோர் உன்னை
கொடுஞ் சிறையுள் பூட்டிவைக்க? கொத்துக்கொத்தாய்
புற்றினின்றும் மேலெழும்பும் ஈசல்போல
பொங்கிவரும் கிணற்றூற்று நீரைப்போல,
பற்றுமிகும் உன்நெஞ்சில் கொப்பளிக்கும்
பா—கணையை கண்டரண்டோ கொடுங்கோலாளர்
குற்றமற்ற ஏழைஉன்னை கைதுசெய்து
கொடுங்காவல் சிறைவைத்தார்? அண்ணா! அண்ணா!!

யாப்பறிந்து தேன்தமிழில் கவிதை சொல்லும்
பாவேந்தே நீ நடக்கத் தரையின்மீது
பூப்பரப்பி தமிழர் உன்னைப் போற்ற வேண்டும்!
பொன் மனத்தோய்! உன்தங்கக் கரங்களுக்கோ
காப்பிட்டார்? இக்கொடுமை எங்கள் நெஞ்சை
கட்டவிழ்த்த எருதாக்கும் — கொளுத்தித்தீர்க்கும்
தீப்பிழம்பாய் உருமாற்றும்! எச்சரிப்பேன்
இந்நாட்டை பிணமேடாய் மாற்றிவைக்கும்!

'செத்தபின்பு வாழ்வேன் நான்—தமிழுக்காக
சிதைந் தழிய இங்கு வந்து பிறந்தேன்' என்றாய்
உத்தமனே! சொன்னமொழி வழியே இன்று
உயர் தமிழைக் காக்க உயிர் துடிக்கின்றாயோ?
சத்திழந்த தமிழ்ச் சாதிக் குணர்வை ஊட்ட
சாத்வீகப் போர்மூலம் உரிமை மீட்க
நித்தமும் நீ பாடுபட்டாய்! உன்னை நாங்கள்
நெஞ்சகத்தால் வாழ்த்திப் போரில் குதிப்போம் அண்ணா!

வாழ்வதுவா, சாவதுவா? என்ற கட்டம்!
வாழ்ந்திடத்தான் வேண்டுமென்றால் உரிமை பெற்று
வாழ்ந்திடுவோம் 'தமிழ் வாழ்வு' இனியும் இங்கு
வாலபிடிக்கும்—கால்பிடிக்கும்—மானம் விற்கும்
கீழ்மை—வாழ்வு தொடருமெனில் உரிமைப்போரில்
வீழ்ந்து 'புகழ்—உலகடைவோம்' மானங் காப்போம்!
ஏழ்மையிலே மேன்மை காத்த காசி—அண்ணா!
நீ வாழி! தேன் தமிழும் அறமும் வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகராஜ பாகவதர் வாரம்!

தனது இனிய கானங்களால் தமிழ் உலகையே மதி மயக்கிய பாகவதரின் படங்களையும் அவரின் இனிய குரலையும் திரையில் பார்க்க முடியுமா என்று ஏங்கியவர்களுக்கு இதோ

**செல்லமகால் திரையில்**

இப்பொழுது காட்சியளிக்கிறுர்

**தியாகராஜ பாகவதர் ரி. ஆர். ராஜகுமாரி**

என். எஸ். கிருஷ்ணன் ரி. ஏ. மதுரம் வசந்தகோகிலம்

நடித்த **ஹரிதாஸ்**

**முக்கிய அறிவித்தல்:-**

தியாகராஜ பாகவதரின் குரல் அவரின் பாட்டுகளாக செல்லமகால் தியேட்டரில் காட்சி தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு கேட்கத்தவற வேண்டாம். நேர காலத்தில் உங்கள் ஆசனங்களில் இருக்கவும்.

# அடுத்து

தமிழ் மக்களின்
அழியாத காதல் காவியம்

தியாகராஜ பாகவதர்
சந்தானலக்ஷ்மி
என்.எஸ். கிருஷ்ணன்
ரி. ஏ. மதுரம்
ரி. எஸ். பாலையா

நடித்த

**அம்பிகாபதி**

---

**சிலோன் என்டடெயின்மென்ட்ஸாரின் திரையில் காட்சியளிக்கிறது**

## அனேக மக்களின் வேண்டுகோளுக்கமைய

# சென்ட்ரல் திரையில்

இப்பொழுது காட்சியளிக்கிறது!

**ஜெய்சங்கர் — கே. ஆர். விஜயா,**

நடித்த

# பட்டணத்தில் பூதம்

(ஈஸ்மன் கலர்)

---


## 2வது 'வாரம்'

**கிங்ஸ்லி**
(கொழும்பு)
**பிளாசா**
(வெள்ளவத்தை)
**லிடோ**
(யாழ்நகர்)
**வெலிங்டன்**
(யாழ்நகர்)

சிவாஜி -
சரோஜாதேவி,
முத்துராமன்-
லட்சுமி,
சோ - மனோரமா -
தேங்காய் சீனிவாசன்
ஜெய்குமாரி -
வி. கோபாலகிருஷ்ணன்

—நடித்த—

இசை: கே. வி. மகாதேவன்.
டைரக்ஷன்: வி. ஸ்ரீனிவாசன்.



# அருணோதயம்

## 2-வது மாதம்

கெப்பிட்டல் (கொழும்பு) — விஜயா (யாழ்நகர்)

சிவாஜி
ஜெயலலிதா
பாலாஜி
நிர்மலா - சோ
மற்றும் பலர்
—நடித்த—
ஜெயார் மூவிஸ்



# எங்க மாமா

(ஈஸ்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972-ம் வருடம் ஜூலை மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.